திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 13	விரோதிகிருது — ஆனி — ஜூலை, 1971	மணி 10

இருபா இருபஃது*

(ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,)

முன்னுரை :

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், 'இருபா இருபஃது' என்பது ஒன்று. வெண்பா அகவற்பா என்னும் இருவகைப் பாக்களினால் இயன்ற இருபது செய்யுட்களைக் கொண்ட நூல் ஆதலின், இதற்கு இருபா இருபஃது எனப்பெயர் அமைந்தது. இதன் ஆசிரியர் திருத்துறையூர் அருள் நந்தி சிவாசாரியர் ஆவர். இவரே சிவஞான சித்தியார் என்னும் புகழ்மிக்க சிறந்த நூலையும் இயற்றியவர் ஆவர். இவர் தமது ஞானாசிரியர் ஆகிய மெய்கண்ட தேவரைத் தொழுது துதித்து, அவர்பால் தமக்குற்ற பல ஐயங்களைத் தெரிவித்துக் கொண்டு தெளிவுபெறும் வகையில், சிந்தித்துத் தெளிந்து உணர்தற்குரிய சிறப்பு மிகுந்த இந்நூலை இயற்றியுள்ளார். 'ஐயங்கள் தோன்றுதலே ஆன்மீக வளர்ச்சியின் அறிகுறி' (The deepening of doubt is a sign of spiritual growth) என்பர் அறிஞர். அம்முறையில் இங்கு நிகழப்பெறும் ஐய வினாக்

* திருவையாற்றில் நிகழ்ந்த திருக்குடமுழுக்கு விழாவில், தருமையாதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீகயிலைக் குருமணி அவர்களின் அருளாணையின்படி, நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (29-3-71)

—ஆசிரியர்

களும், உரைகளும், தருக்க நெறிமுறைக்கும், பகுத்தறிவியல்பிற்கும், அறிவாராய்ச்சித் திற னுக்கும் (Logical, rational and original) ஏற்ப அமைந்து, சிந்தனைக்கு விருந்தாகத் திகழ்கின் றன; தத்துவச் சிந்தனையாளர்கள் பொன்னினும் மணியினும் போற்றத்தக்கனவாகப் பொலி கின்றன. ஆதலின் இந்நூலின் கருத்துப் பொருட் சுருக்கத்தினை மட்டும், இங்கு இயன்ற வரையிற் சிறிது காண்போம்.

கடவுள் வணக்கம் :

(1) இந்நூலின் முதற் செய்யுள் கடவுள் வணக்கமாக அமைந்துள்ளது. கடவுளே குருவாக வந்து அருள்புரிதலினாலும், குரு கடவுளுக்குச் சமமானதாலும், ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரியர், தமது குருவாகிய மெய்கண்ட தேவரையே கடவுளாக வைத்துப் போற்றித் துதித்துள்ளார். "சிவபெருமானே தன்னுடைய நெற்றிக் கண்ணையும், திருநீல கண்டத்தினையும் மறைத்து, திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டதேவர் என்னும் பெய ரும் திருவுருவமும் கொண்டு எழுந்தருளிப் போந்து, உலக மக்களின் மலமாசுகளைப் போக்கியருள்கின்றார். அவரை ஒருமுறை சென்று பொருந்தி நினைத்துத் தொழுபவர்கள், உயிருக்குயிராக உள்ள சிவபெருமானைத் தம் முடைய உள்ளத்தின்கண் தெளிவுறக் கண்டறி யும் பேறு பெற்றவர்கள் ஆவர்" என்பது இம்முதற்பாடலின் கருத்து. இதனால் சிவ பெருமானே மெய்கண்ட தேவராக எழுந்தரு ளித் தமக்கு அருள்புரிந்தனர் என ஆசிரியர் புகழ்ந்து துதிக்கின்றார்.

பதியிலக்கணம் :

(2) இந்நூலின் இரண்டாவது பாடல், ஆசிரியர் அருள்நந்திசிவாசாரியர், பதியிலக் கணம் பற்றித் தமக்குத் தோன்றும் ஐயங் களைத் தமது ஆசிரியர்பால் தெரிவித்துக் கொள்ளும் முறையில், அமைந்துள்ளது. "உல கத்துப் புறஇருளைப் போக்குகின்ற சூரியனைப் போல, அறியாமையாகிய அக இருளைப் போக்கியருளுகின்ற ஞான சூரியன் எனத் திருவெண்ணெய்நல்லூரில் தோன்றி யருளிய மெய்கண்ட தேவே! அறியாமை யாகிய சிறையில் அடைபட்டு, உடலாகிய விலங்கு பூண்டு துன்பப்படுகின்ற என்னை, நிலைபெற்ற பேரின்பத்தில் சேர்ந்திருக்குமாறு செய்தருளிய பெருமானே! தங்கள்பால் யான் சில ஐயங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கின்றேன்.

எளியேனுடைய உள்ளத்தை விட்டு நீங் காமல், அறிவே உருவமாக விளங்கும் தாங்கள், எப்பொழுதும் இருந்து வருகின்றீர்கள். அங் ஙனமாகவும் அடியேனுக்கு அறியாமை வரு வதற்குக் காரணம் என்ன?

நெல்லிற்கு உமியும், செம்பிற்குக் களிம் பும் போல, அநாதியே ஆணவ மலம் உன்னைப் பற்றிக்கொண்டு நிற்றலால், உனக்கு அறி யாமை உண்டாயிற்று, என்று நீர் அருளிச் செய்தால்;

அது, தேவரீர் என்னை விட்டு ஒதுங்கி நின்று, ஆணவ மலம் என்னைப் பற்றிக் கொள் ளுவதற்கு இடமளித்ததாக முடியும்;

'அற்றன்று; யாம் உன்னைவிட்டு நீங்கி ஒதுங்கி நிற்பதில்லை; யாமும் உன்னோடு கூடியே நிற்கின்றோம்' என்று நீர் கூறியருளினால்; அது பொருத்தமாகப் புலப்படாமல், வியத்தற் குரிய ஒன்றாக உள்ளது.

ஆணவ மலத்தைப் போலவே, நீரும் எம்மோடு கலந்து ஒன்றாக நிற்பது உண்மை யாயின், வேதங்கள் நும்மை அஞ்ஞானமாகிய பொய்க்குப் பகைவன் என்று போற்றுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. தாங்கள் இயல்பாகவே தூய்மையுடையவர், மலம் இல் லாதவர், பேரொளி வடிவினர், எத்தகைய துன்பங்களும் இன்றி அவற்றிற்கு அப்பாற் பட் டவர். எல்லாவற்றுக்கும் மேலானவர். இங் ஙனம் மலங்களைக் கடந்து மலரகிதராக உள்ள தாங்கள், மலங்களுக்கு உட்பட்டு மலசகிதராக உள்ள என்போன்ற உயிர்களுடன் கூடி நிற்பது எங்ஙனம்?

யாம் நின்னோடு கூடி நிற்பதில்லை; நின் அறிவுக்கு வேறாக நின்று நினக்கு அறிவித்துக் கொண்டு நிற்போம் என்று, தேவரீர் அருளிச் செய்தால்;

அங்ஙனம் உயிர்களாகிய எம்மின் வேறுபட்டு நிற்கும் தங்களுக்குச் சர்வ வியாபி (எல்லாவற்றிலும் கலந்து பரவி வியாபித்து நிற்பவர்) என்னும் சிறப்பு இல்லையாய் ஒழியும்; அதுமட்டுமின்றி அடியேனுக்கும் தங்களுடன் இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சியம் என்கின்ற பரமுத்தி நிலை கிடையாமற் போகும். அது அன்றியும், தாங்கள் உலகப் பொருள்கள் எல்லாவற்றிலும் கலந்து வியாபித்து நிற்கும் பெருநிலையை ''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியும் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி'' என விளக்கித் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் கூறுகின்ற பரிபூரண நிலை, தங்களுக்கு இல்லை என்று ஆகும். ஆதலின், தாங்கள் எனக்கு அறிவிக்குங்கால், எனக்கு வேறாய் நின்று அறிவிப்பீரோ? அல்லது என்னோடு ஒன்றுகூடி உடனாய் நின்று அறிவிப்பீரோ? இதனை ஐயப்பாடு அற அருளிச் செய்தல் வேண்டும்.

வேறாய் நின்று அறிவித்தல், உடனாய் நின்று அறிவித்தல் என்பன பற்றிய ஐயம் ஒரு புறம் இருக்க; தாங்கள் எனக்கு என் பக்குவ நிலையில் அறிவிக்கின்றீரா? அல்லது அபக்குவ நிலையில் அறிவிக்கின்றீரா?

அபக்குவநிலையில் அறிவித்தால், தாங்கள் அறிவித்தாலும்; யான் என்னுடைய அபக்குவ நிலையினால், எதனையும் அறிதல் இயலாது. தாங்கள் எனக்கு அறிவிப்பதற்குப் பக்குவம் வேண்டப்படுமாயின், அப்போது தங்களால் எனககுப் பயனில்லை என்றாகும். அற்றன்று உயிர்களின் பக்குவத்திற்கேற்ப, அப்பக்குவங்களின் பயனாக யான் எழுந்தருளி அறிவிப்பேன் என்றால், பக்குவம் என்பது அறிவில்லாத ஒரு சடநிலை ஆதலினால், அது தங்களை என்பால் வருவிக்க மாட்டாது. அவ்வாறன்று, பக்குவநிலை என்பதுதான் எம்மை நும்பால் எழுந்தருளச் செய்யும் என்றால், ஒருவகையில் அது நும்மை ஏவுகின்ற தலைமைப்பாடுடையதாகும். அப்போது வேத சிவாகமங்கள் நும்மை ஒப்புயர்வற்றவர், தனக்குவமை இல்லாதவர் என்று புகழ்ந்து கூறும் உரைகள் இழுக்காய் ஒழியும்:

அதுமட்டுமல்லாமல், ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்களும் சடப் பொருளாக இருத்தலின், அவற்றிற்குப் பக்குவம் வேண்டுவதில்லை. ஆன்மா அச்சு மாறி எடுத்த உடல்தோறும், தான் சார்ந்ததன், வண்ணமாகி நின்று, மூப்பு இளமை முதலிய பல்வேறு மாறுதல்களைப் பெற்று வருவதனால், அதற்கும் பக்குவம் என்பது கூடாது. தாங்களோ தேகசம்பந்தம் இல்லாமல் அமல நிலையில் விளங்குபவர். ஆதலால் பக்குவநிலை என்பது பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் யாருக்கு உரியது?

ஆன்மாக்களுக்கு அறிவு உண்டாகும் நிலையில் புண்ணிய பாவங்கள் ஆகிய இருவினையொப்பு ஏற்பட்டு, மலம் நீங்கப் பெறுகின்ற நிலையை அடைதலே பக்குவம் என்றால், தாங்கள் இணையிலலாதவராக விளங்குகின்றீர் என்பதை யான் அறியுமாறில்லை.

மலநீக்கமே பக்குவமெனில், அம்மலம் தானே நீங்குகின்றதா? அல்லது அதனை யான் நீக்கிக் கொள்கின்றேனா? மலம் தானே நீங்கினாலும், யான் அதனை நீக்கிக் கொண்டாலும், தங்களுடைய உதவி எனக்குத்தேவையில்லாமல் போகும். தங்களுடைய உதவி எனக்கு எப்போதும் இன்றியமையாதது என்று யான் நன்கினிது உணர்தலினால், அதுவும் எனக்குப் பொருத்தமாகப் புலப்படவில்லை. ஆதலின் எனது இவ் ஐயத்தினை நீக்கும் வகையில் தாங்கள் எனக்குத் தெளிவுரை கூறியருளுதல் வேண்டும்''

என்று இவ்வாறு பல ஐயங்களை அருள்நந்தி சிவாசாரியர் தெரிவித்துக் கொள்கின்றார். அவற்றிற்கு ஆசிரியர் மெய்கண்டார் அருளிய தெளிவுரையையும், இப்பாடலின் இறுதி அடிகளில், அருள்நந்தி சிவாசாரியார் பின்வரும் கருத்தமையச் சுருக்கமாகக் குறிப்பிட்டருள்கின்றார்,

மலம் தானாகவும் நீங்காது; நீயே அதனை நீக்கிக் கொள்ளவும் இயலாது. மலம் நீங்கும் நிலையை உண்டாக்கி, நினக்குப் பொருள்களை அறிந்து அறிவித்துக் காட்டி உதவிபுரிவது யாமே யாவோம்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர்
ஆடா தாரே?
அடங்குவித்தால் ஆரொருவர்
அடங்கா தாரே?
ஓட்டு வித்தால் ஆரொருவர்
ஓடா தாரே?
உருகுவித்தால் ஆரொருவர்
உருகா தாரே?
பாட்டுவித்தால் ஆரொருவர்
பாடா தாரே?
பணிவித்தால் ஆரொருவர்
பணியா தாரே?
காட்டுவித்தால் ஆரொருவர்
காணா தாரே?
காண்பாரார் கண்ணுதலாய்க்
காட்டாக் காலே?

எனவரும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் **''காண்பார் யார்? கண்ணுதலாய்க் காட்டாக் காலே''** என்றபடி, சிவன் காட்டினாலன்றிச் சீவன் எதனையும் தானே காணவல்லதன்று.

அங்ஙனம் சிவன் காட்டுவனாயின், சீவர்கள் அனைவரும் ஒரே நிலையில் ஒருபடித்தாகப் பொருள்களை ஏன் உணரவில்லை எனறால், சிவன் எல்லா உயிர்களுக்கும் ஒருபடித்தாகவே உணர்த்தி அருள முற்பட்டாலும், சீவர்கள் தமக்கே உரிய குறைபாட்டால் பொருள்களை ஒருங்காகவும் ஒருபடித்தாகவும் உணரும் திற மிலராக உள்ளனர். சூரியன் பகலிற் பொது வாக ஒளிவீசினும் பிறவிக் குருடர்களுக்கு அது பயன்தருவதில்லை. கூகை ஒளிமிக்க பகலில் பொருள்களைக் காணமாட்டாமல், இருள்மிக்க இரவிலேயே பொருள்களைக் காணவல்லதா கின்றது. இவ்வாறு உயிர்களின் தனித்தனி அறிவும் ஆற்றலும் வெவ்வேறு வகைப்பட்டு நிற்றலின், தடங்கருணைப் பெருங்கடலாகிய இறைவன், அவ்வவ் உயிர்களின் அறிவு ஆற்றல் தகுதிகளுக்கு ஏற்பவே, அவற்றிற்கு அறிவித்து அருள்புரிதல் இன்றியமையாததாகின்றது. இதுபற்றியே திருஞானசம்பந்தப்பெருமான், மதுரையில் பாண்டிய மன்னன் கேட்டு உணரும் பொருட்டு அருளிச்செய்த, மெய்ஞ்ஞானத்தை விளைவிக்கின்ற சிறப்புடைய திருப்பாசுரம் என்னும் திருப்பதிகத்தில்,

''ஆட்பா லவர்க்கு அருளும் வண்ணமும்
ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை;
கிளக்க வேண்டா;
கோட்பா லனவும் வினையும்
குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று
இவை கேட்க தக்கார்!

என்னும் திருப்பாடலினால், இறைவன் தான் ஆட்கொள்ளும் அடியவர்களின் தரமறிந்து அருள்புரியும் திறத்தினைக் குறிப்பிட்டருளி யிருக்கின்றார்.

பசு இலக்கணம் :

(3) இந்நூலின் மூன்றாம் செய்யுளில் ஆன்மா அல்லது உயிர் எனப்படும் பசுவின் இலக்கணம் பற்றிய ஐயங்கள் விண்ணப்பித்துக் கொள்ளப்படுகின்றன. ''மெய்கண்ட தேவர் பெருமானே! யான் ஒரு சிலவற்றைச் சில சில சமயங்களில் மட்டும் அறிகின்றேன். மிகப் பலவற்றைப் பலகால் அறியாமல் ஒழிகின் றேன். இவ்வாற்றால் என்பால் அறிவும், அறியாமையுமாகிய இரண்டுமே செறிந்து விரவி நிற்கக் காண்கின்றேன். இவ்விரண்டில் யான் அறிவை உடையவனா? அல்லது அறி யாமையையே உடையவனா? இவ்விரண்டில் எனக்கே உரிய இயல்பான பண்பு எது? அருள் கூர்ந்து இதனை எனக்கு ஆராய்ந்து காட்டித் தெளிவுறுத்தி அருளுதல் வேண்டும்''.

ஆன்மா சிவத்தைப்போல அறிவும் அன்று. சடப்பொருளாகிய பாசத்தைப் போல அறி வில்லாததும் அன்று. தானே அறியாமல், அறி வித்தால் அறிந்து கொள்ளுகின்ற இயல்பை உடையது ஆன்மா. ஒருவாற்றான் அறிவும், பிறி தொருவாற்றான் அறியாமையும் உடையது ஆன்மா. இது பற்றியே ஆன்மாவிற்குச் சத சத்து என்றும், சிதசித்து என்றும் பெயர் வழங் கும்.

பாச இலக்கணம்:

(4) இந்நூலின் நான்காம் பாடலில் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூவகைப் பாசங்கள் பற்றிய ஐயங்கள் விண்ணப்பித்துக் கொள்ளப்படுகின்றன.

"ஆசிரியர் பெரும! தாங்கள் முன்பே எனக்குக் கடவுள்-உயிர்-உலகம் (பதி - பசு - பாசம்) என்னும் முப்பொருள்களின் இயல்பை உபதேசித்தருளியபோது, ஆணவம் - மாயை - கன்மம் என்னும் மூன்று மலங்களைப் பற்றிக் குறிப்பிட்டருளினீர்கள். அவற்றுள் ஆணவ மலமானது, **விகற்பம்** (பிறபொருள்களினின்று தன்னை வேறுபடுத்திக் கொண்டு நிற்றல்), **கற்பம்** (எதனையாவது தானே எண்ணிக் கற்பனை செய்து கொண்டு நிற்றல்), **குரோதம்** (எதனையாவது கோபித்தல்), **மோகம்** (எதனையாவது விரும்பிக் காமுற்றிருத்தல்), **கொலை** (பிற உயிர்களை வருத்திக் கொல்லுதல்), **அவுர்** (துன்பம் நேர்ந்தால் கவலைப்படுதல்), **மதம்** (நினைவு சொல் செயல்களால் செருக்குற்று நிற்றல்), **நகை** (பிறரையும் பிற பொருள்களையும் இகழ்ந்து திரிதல்), என்னும் எட்டு இயல்புகளை உடையது;

மாயையானது **அஞ்ஞானம்** (பொருளல்லதனைப் பொருளென்று கொள்ளுதல்), **பொய்** (மன மொழி மெய்களில் செப்பமின்மை), **அயர்வு** (ஒன்றை மறந்தும் மயங்கியும் வருந்துதல்), **மோகம்** (புல்லிய பொருள்களை விரும்பி உழலுதல்), **பைசாசூனியம்** (ஒரு பொருளின் மேற்கொண்ட தீய வேட்கையை ஒளித்தல்,) **மாற்சரியம்** (பிறர்பால் பகைமை பாராட்டுதல்), **பயம்** (அஞ்சத் தகாதனவற்றிற்கு அஞ்சுதல்) என்னும் ஏழு குணங்களையுடையது;

கன்ம மலமானது, **இருத்தல்** (ஏதேனும் ஒவ்வோர் இடத்தைப் பற்றி இருத்தல்), **கிடத்தல்** (நோயாய்க் கிடத்தல்), **இருவினை இயற்றல்** (புண்ணிய பாவங்களைச் செய்தல்), **விடுத்தல்** (ஒவ்வொரு பொருளின் பாற் கொண்ட பற்றை நீக்குதல்), **பரநிந்தை** (தானல்லாத அனைவரையும் நிந்தித்துப் பழித்தல்) **மேவல்** (இழிந்ததனையும் இழிந்தவர்களையும் விரும்பிச் சேர்தல்) என்னும் ஆறு குணங்களையுடையது; என்று கூறியருளினீர்கள்.

இம்மூவகை மலங்களும் என்னைவிட்டு, நீங்காமல் நின்று, தம் வழியில் என்னை இழுத்துக்கொண்டு சென்று தீயனவற்றிற் செலுத்தி என்னைத் தம் வயமாக்கி அடிமைப்படுத்திக் கொண்டு, என்னைப் பலவகைகளிலும் அலைத்து வருகின்றன.

இத்தகைய மலங்களினின்று என்னை விடுவித்துக் காத்தருளுதற் பொருட்டு, ஊரும் பேரும் உருவமும் கொண்டு, பெண்ணையாறு சூழ்ந்து ஓடுகின்ற திருவெண்ணெய்நல்லூரில் **மெய்கண்ட தேவர்** என்னும் திருப் பெயரும் வடிவமும் கொண்டு எழுந்தருளி, என்னுடைய ஊரும் பேரும் உருவமும் நீங்குமாறு, எனக்குப் பிறப்பு இல்லாதபடி செய்து காத்தருளிய சைவசிகாமணியே! மெய்யருள் மெய்யனே!

ஆணவம் மாயை கன்மம் ஆகிய மூன்று மலங்களும், சடப் பொருள்கள் என்று கூறியருளினீர். அது பொருத்தமில்லாத மாறுகோள் உரைபோல எனக்குத் தோன்றுகிறது. மும்மலங்களும் சடமாயின், அறிவில்லாத அவைகள் என்னை வருத்துதல் எங்ஙனம் இயலும்!

சடப்பொருள்களுக்குத் தாமே செயற்படும் திறம் இல்லை என்பதனைக் கடம் (குடம்) படம் (துணி), ஆகிய சடப்பொருள்களால் அறிகின்றோம். அவைகள் தமக்கென ஒரு செயலும் உடையனவாகக் காணப்படவில்லை.

அற்றன்று; சடப்பொருளுக்கும் செயல் உண்டு. **விடம்** (நஞ்சு) ஒரு சடப்பொருளேயாகும். ஆயினும், அவ்விடம் ஓர் உயிரின் ஊன்திரளிற் கலந்து, அதனைக் கொல்லுதலைக் காணுகின்றோமே எனின்,

நஞ்சானது ஓர் உடலில் கலந்து வருத்திப் பின்னர்த் தன் ஆற்றலும் குன்றி நீங்கி விடுகின்றது; அதுபோல இம்மலங்களும் சிலகாலம் இருந்து பின்னர்த் தாமே நீங்கி ஒழிதல் வேண்டும்; அதுமட்டுமன்றி நஞ்சானது உயிர்களைக் கொல்லுதலாகிய ஒரு பண்பும் செயலும் மட்டுமே கொண்டுள்ளது. ஆனால் இம்மலங்களோ பல்வேறு வகை வகையான இயல்புகளைக் கொண்டுள்ளன. ஆதலின் மலங்களுக்கு விடத்தை உவமையாகக் கொள்ளுதல் **திருஷ்டாந்த விரோதம்** என்னும் குற்றமுடையதாகின்றது.

மலம் சடமாயின், அது தானே வந்து உயிர்களாகிய எம்மைச் சாராது. கொடிய மலத்தின் சேர்க்கையை யானும் விரும்பி உண்டாக்கிக் கொள்ளமாட்டேன். தேவரீர் மலங்களுக்கு அப்பாற்பட்டவராதலால், தாங்கள் எனக்கு அவற்றை உண்டாக்கியிருக்கமாட்டீர்.

மலங்கள், ஆன்மாக்கள் உள்ள அன்றே அவற்றிற்கு இயல்பாக அமைந்து கிடப்பவை என்ருல், பாலில் வெண்மையும், கரியில் கறுப்பும் போல, மலங்களும் உயிர்களுக்கு இயல்பாக உள்ள இயற்கைப் பண்புகளாய், ஒரு காலத்திலும் அவைகளை விட்டு நீங்கி அழியமாட்டா.

ஆதலின் இத்தகைய கொடிய பாச பந்தங்களாகிய, மலங்கள் உயிர்களாகிய எம்மைப் பற்றிக் கொண்டது எங்ஙனம் என்பதை விளக்கியருளுதல் வேண்டும்!"

பாசம் தானுகவும் உயிர்களைப் பற்றிக் கொண்டதில்லை. உயிர்களும் பாசத்தை விரும்பிச் சென்று சேர்ந்து கொள்ளவில்லை. இறைவனும் உயிர்களை மலங்களோடு சேர்த்து வைக்கவில்லை நெல் உள்ள அன்றே உமி அதனோடு உடனுயினற் போலவும், செம்பு உள்ளவன்றே களிம்பு அதனோடு உடனுயினற் போலவும், உயிர்கள் உள்ள அன்றே அவற்றிற்கு மலச் சேர்க்கை ஏற்படுவதாயிற்று என்பது முடிவு

பாச தரிசனம் :

(5) எனது ஞானத் தந்தையே! மருள் என்னும் குறிஞ்சி யாழ்த்திறமாகிய பண்ணினை வண்டுகள் இருந்து பாடுகின்ற மாலையினை அணிந்தவரே! திருவெண்ணெய்நல்லூரில் வாழ்கின்ற ஞானப் பேரரசரே! மேற்கூறிய பாசமாகிய மலங்கள் அஞ்ஞானம் ஆதலால், மெய்ஞ்ஞான வடிவமாகிய தங்களுடைய திருமுன்னர் நிற்கமாட்டா. அடியேனுக்குச் சுதந்திரமாகக் காணும் அறிவு இல்லை. இவ்வாறு இருக்கவும், அடியேன் அஞ்ஞான இருளாகிய மலத்தினை அறிந்ததன்மை எவ்வாறு? அருளுடைய பெரியோய்! இந்த ஐயத்தினை எனக்குப் போக்கி யருளுதல் வேண்டும்.

ஆன்மா, தனக்கு வேருன உலகத்தைத் தனக்கு அறிவித்துத் தன்னின் வேருகி நிறைந்து நிற்கின்ற திருவருளைப் பெத்தகாலத்தில் அறியாது. ஆனுல் அது பின்னர் முத்தி நிலையில் சிவமுதல்தானே எங்கும் வியாபித்து நிற்கின்ற தன்மையை உணரப்பெறும். அதுபோலப் பெத்தநிலையில் ஆன்மா ஆணவ மல இருளால் பிணிப்புண்டு அதனை அறியாமல் கிடக்கும். ஆயினும் முத்தி நிலையில் திருவருள் இன்பத்தில் திளைக்கின்றபோது, இதுகாறும் இத்தகைய பேரின்பத்தை அனுபவிககப் பெருதிருந்தோமே அதற்கு யாது காரணம் என்று கருதி உணர முற்படுங்கால், ஆணவ மலத்தின் இயல்பை அனுமானப் பிரமாணத்தினுல் திருவருளின் துணையால் அறிந்து கொள்ளும் என்பது கருத்து

பசு தரிசனம் :

(6) எட்டாம் பிறைச் சந்திரனைப்போன்ற அழகிய திருநெற்றியை உடைய அம்பிகையை ஒருபாகத்திற் கொண்டவரே! எனக்கு வீடு பேற்றை அளித்தற் பொருட்டுத் திருவெண்ணெய்நல்லூரில் தோன்றியவரே! எளியேனுடைய உள்ளத்திலே வந்து புகுந்து, அறியாமை இருள் அடைந்து கிடந்த அவ்வுள்ளத்தில், சிவஞான ஒளி பெருகச் செய்தவரே! அளவுபடுத்த இயலாத பதிப் பொருளின் இயல்பினைக்காட்டியருளி அவ்வாற்ருல் எளியேனுடைய இயல்பினையும், யான் காணுமாறு எனக்குத் திருவருள் புரிந்தருளிய பெருந்தகையே!

நூல்களைக் கற்றறிந்த அடியேன், என் அறிவு சென்று அறிந்த பொருள்களினெல்லாம், பாதாள சத்தி பரியந்தமாக முழுவதும் கலந்து நிறைந்து நின்றேன். அங்ஙனம் என் அறிவால் முழுவதும் கலந்து நிறைந்துநின்றும். ஒன்றை அறியுமிடத்து ஐம்புலன்களாகிய சிறு துளைகளில் நுழைந்து கூடியே அறிந்தேன்; அங்ஙனம் அறிகின்ற அறிவையும் விட்டுநீங்கி மயங்கிய விடத்து, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளின் வயப்பட்டு நின்றேன். அவ்வாறு அவத்தைப் படுவதற்கு ஏதுவாகிய ஓர் உடலைவிட்டு நீங்கிய நிலையில், மற்றும் ஒரு உடலில் சென்று புகுந்து நின்றேன்;

இவற்றைத் தேவரீர் திருவுள்ளத்தில் ஆராய்ந்தருளி, அடியேன் ஓதி உணர்ந்த இடமெங்கும் விரவிக்கலந்து நிற்றல் இப்பொழுது இவ்வுடலிற் கூடி நின்று வாழ்ந்து இதன்கண் ஐந்து அவத்தைப்படுதல், இவ்வுடலின் தொடர்ச்சியை விட்டு நீங்கிப் புண்ணிய பாவங்களுக்கு ஏற்பச் சுவர்க்க நரகங்களிலே சென்று அவற்றின்பயனை நுகர்தல் ஆகிய மூன்று பகுதியுள்ளும், ஆன்மாவிற்குரிய இயல்பான தன்மை எது? என்பதை விளக்கி யருளுதல் வேண்டும்.

இம் மூன்றனுள் ஒன்றன்று, இம்மூன்றுமே ஆன்மாவுக்குரியஇயல்புகளாகும் என்றுதாங்கள் அருளிச் செய்தால்—, ''இல்லது இலலதே. உள்ளது உள்ளதே, இல்லது உள்ளதாகாது, உள்ளது இல்லதாகாது'' என்னும் சற்காரிய வாதக் கொள்கைக்கு ஏற்ப, ஆன்மாவானது ஒருபோது அணுவாகச் சிறுகியும், பிறிதொரு போது மலையாகப் பெருகியும், மாறிமாறி வருதல் பொருந்தாது.

அற்றன்று; ஆன்மா ஒருதன்மையாகக் கலந்து நிறைந்து நிற்பினும், யானையின் உடலிற் புகுந்து பெரியதாகியும், எறும்பின் உடலிற் புகுந்து சிறியதாகியும் நிற்றல் போல்வது இது என்று தாங்கள் கூறியருளினல்—, அது ஆன்மாவின் ஞான நிலையினைக் குறிக்காமல் உடம்போடு கூடிய காய வாழ்க்கையினை மட்டும் உணர்த்துவதே யாகும். அவ்வாறன்று, ஆன்மாக்கள் வினைக்கு ஏற்ப ஓர் உடலைக் கூடி, அதன் இயல்பிற் கேற்பப் பெரியதாகியோ, சிறியதாகியோ அறிவு தொழிற்பட்டு நிற்கும் என்றால், ஆன்மாவானது தான் எய்திய பிறவிக்கும் உடலுக்கும் ஏற்றபடி அறிவாய் இருக்குமாயின், அது முன்னே தான் எடுத்து விட்டு நீங்கி வந்த பிறவிகளையும் உடலையும் இன்னது இன்னது என்று அறிதல் வேண்டும். ஆன்மா தான் கூடிய உடலின் பெருமைக்கும் சிறுமைக்கும் ஏற்பவே அறிந்து தொழிற்படும் என்றால்—, அவ்வியல்பு பெரியதிற் பெரியதாயும், சிறியதிற் சிறியதாயும் விளங்கவல்ல பதிப் பொருளாகிய தங்களின் இயல்பிற்குப் பொருந்துமேயன்றி, தனக்கென ஒரு சுதந்திரம் இல்லாத ஆன்மாவிற்குப் பொருந்தாது. ஆதலின் ஆன்மாவிற்குரிய உண்மையியல்பினைத் தாங்கள் எனக்கு விளக்கியருளுதல் வேண்டும்.

ஒரு படிகமானது, தான் எந்த வண்ணத்தினைச் சார்ந்து நிற்கின்றதோ அதன் வண்ணமாகி நிற்றல் போல, ஆன்மாவும் தான் எந்தப் பொருளினைச் சார்ந்து நிற்கின்றதோ, அதன் தன்மையைப் பெற்று விளங்கும்; கன்மத்துக்கு ஏற்பத் தான் கூடிய உடலின் அளவிற்கு இயைய வியாபித்து நின்று, தன் அறிவு இயங்கப்பெறும். ''செறிந்திடும் உடலுள் மன்னிச், சேர்புலன் வாயில் பற்றி அறிந்து, அதில் அழுந்தும்''.

அவத்தைகளின் நிலை :

(7) திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவரே! சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் அவத்தைகள் ஐந்திலும், முதல் அவத்தையாகிய சாக்கிரம் என்னும் விழிப்பு ஆகிய நனவு நிலையில் அடியேன் நின்ற இடத்தில், மற்றைய சொப்பனம் சுழுத்தி, துரியம் துரியாதீதம் என்னும் நான்கு அவத்தைகளையும் யான் அறிவதில்லை. அந்நிலைகளில் கருவிகள் குறைதலும் மிகுதலுமாகிய தன்மையையும் யான் உணர்வதில்லை. ஆதலின், நனவுநிலை ஒழிந்த ஏனைய நான்கு அவத்தை நிலைகள் உண்டு என்று யான் அறிவது எங்ஙனம்? என்று அருளிச் செய்தல் வேண்டும்.

ஆன்மாவிற்கு அதன் கன்மத்திற்கு ஈடாக உடம்பு வந்து கூடுகின்றது. உடம்பொடு கூடி நின்றே ஆன்மாக்கள் தத்தம் கன்மங்களின் பயனை அனுபவிக்கின்றன. அங்ஙனம் அனுபவிக்குங்கால், ஆன்மாவானது, இந்திரியங்களைக் கொண்டு, ஐம் பூதங்களின் இடமாக நின்று, பொருள்களை அறியும். அதுபோது ஆன்மா அனுபவித்தற்குரிய பொருளை மனம் சென்று பற்றும், ஆங்காரம் யான் நுகர்வேன் என்று எழும், புத்தி நிச்சயிக்கும், சித்தம் சிந்திக்கும், காலம் பொருள்களைக் கூட்டுவிக்கும்; நியதி வரையறை செய்யும். கலை தொழிற்படுத்தும். வித்தை அறிவை எழுப்பும். அராகம் இச்சையை விளைவிக்கும். மாயை பயக்கும்; புருடதத்துவம் நுகர்ச்சியில் அழுந்தச் செய்யும். சுத்த வித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னும் சுத்த தத்துவங்கள், இத்தத்துவங்களைச் செலுத்தி இயக்கி நிற்கும்.

இவற்றால் புருவநடு கண்டம் இதயம் நாபி மூலம் என்னும் இடங்களில், முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளை ஆன்மா அடையும். அவற்றில் முறையே 35,25,3,2,1, ஆகிய கருவிகள் தொழிற்படும் என்பது கருத்து.

ஆன்ம வியல்பு :

(8) திருவெண்ணெய்நல்லூரில் வாழ்கின்ற மெய்கண்ட தேவரே? ஆன்மா என்றொரு முதல் உண்டு என்பதை அறியும் வகை யாது? சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளை அடைந்து வருதலைக்கொண்டு, ஆன்மா என்ற ஒரு பொருள் உண்டென்பதை அறியலாம் என்றால், அந்த அவத்தைகளை எய்தும்போது, யான் அவற்றை இன்னது இன்னது என்று அறிந்து, அவ் அவத்தைகளின் மறப்பை நீக்கிக் கொண்டேன் இல்லை. அவத்தைகளின் மறப்பைக் காலம் நியதி முதலிய கருவிகள் தான் நீக்கும் என்றால், எனக்குப் பிறகு உணர்த்துவது ஒன்று இல்லையாகும். மறப்பை நீக்கவல்லன எனப்பட்ட காலம் நியதி முதலிய கருவிகளின் இயல்பை ஆராய்ந்தால், ஒருகருவி மற்றொரு கருவியை அறியாது. அன்றியும் அந்தக் கருவிகள் அறிவில்லாத சடப்பொருள்கள் ஆகும்.

அறிவாயுள்ள ஆன்மா அந்தக்கருவிகளுடன் கூடிநிற்க, அவை தொழிற்படும் என்றால், கருவியை உடைய ஆன்மாவின் துணையைக் கொண்டு தொழிற்படும் அறிவு, அந்தக் கருவிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. என்னுடைய அறிவு அந்தக் கருவிகளைக் கூட்டுகின்றது அன்று. கருவிகள் எல்லாம் கூடிய சாக்கிர நிலையிலும், ஆன்மா சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் (சுவை, ஒளி, ஊறு ஓசை நாற்றம்) என்னும் ஐம்புலன்களை, ஒவ்வொன்றாக அறிவதன்றி, ஒருங்கே அறிவதில்லை. அந்தக் கருவிகள் தொழிற்படும் நிலையினின்று நீங்குவதையும் அஃது அறிவதில்லை.

ஆன்மா பொருள்களை அறியுங்கால் தானே தனித்து ஒன்றையும் அறியாமல், பதிப்பொருள் அறிவித்தால் மட்டுமே அறியவல்லதாகும் என்றால்—, பதிப்பொருள் ஆன்மாவிற்குப் பொருள்களை அறிவிக்கின்ற வெறுங் கருவியாக முடியும். தலைவன் என்ற நிலையும் பெருமையும் பதிக்கு இல்லை என்றால், அந்நிலையில் பதிப்பொருள் கருவியாக அமைய, அதனைப் பயன் கொள்ளுகின்ற ஆன்மா, தானே முதற் பொருள் என்னும் நிலையில் விளங்க முற்படும்;

பதிப்பொருள் அறிவிக்க ஆன்மா அறியுமாயின், அறிவிக்கின்ற பதிப்பொருளை எதிர்ப்பட்டு, 'நமக்கு அறிவிக்கின்ற முதல் இது' என்று அறியும் ஆற்றல் ஆன்மாவுக்கு இல்லை. பதிப் பொருளின் முன்னர் ஆன்மாவின் அறிவு முனைத்து நிற்றல் இல்லை. ஆதலின் ஆன்மா தன்னை அறியவோ, தலைவனை அறியவோ வல்லதன்று. தலைவனாகிய பதிப்பொருளோடு சென்று கூடி அறியும் தகுதியும் ஆன்மாவிற்கு இல்லை. இந்நிலையில் ஆன்மாவாகிய யான், என்னை அறிந்த தன்மை எவ்வாறு? என்பதனை அருட் பெருங் கடலாகிய தாங்கள் விளக்கியருளுதல் வேண்டும்.

பதிப்பொருளாகிய இறைவன் அருள் புரிதல் காரணமாகத் திருமேனி கொண்டு போந்து அறிவிக்க, ஆன்மா தனக்கென ஒரு சுதந்திரமின்மையை அறிந்து கொண்டு, அறிவிக்கின்ற பதிப்பொருளின் அறிவின்வழி அடங்கி நிற்குமாயின், தன்னைத்தான் உணரப்பெறும். பதி அறிவித்தாலன்றி, ஆன்மா தானே எதனையும் அறியவல்லதன்று என்பது கருத்து.

துரியாதீத நிலை :

(9) கடலில் தோன்றிய அமுதம் போன்றவரே! திருவெண்ணெய்நல்லூரில் வாழ்ந்து, யாவர்க்கும் கரும்பைப்போன்று இனியவரே! எனக்குக் கண்போல விளங்கிப் பொருள்களை விளக்கிக் காட்டி அருள்பவரே! ஆன்மா உடலின்கண் மூலாதாரத்தில் ஒடுங்குங்கால், அஃது அறிவதற்குப் பயன்படும் கருவிகள் யாவை? அக்கருவிகளைக் கொண்டு ஆன்மா அந்நிலையில் எதனை உணர்கின்றது? என்பனவற்றை, அருள்கூர்ந்து தாங்கள் எனக்கு அறிவித்து அருளுதல் வேண்டும்.

ஆன்மா மூலாதாரத்தில் ஒடுங்குகின்ற துரியாதீத நிலையில், பிரகிருதி தத்துவம் கூடி நிற்றலால், அங்குக் காலம் நியதி என்னும் தத்துவங்கள் கருவியாக அமையும். ஆன்மா

நாபியில் ஒடுங்கும் துரிய நிலையில் கலை வித்தை அராகம் என்னும் தத்துவங்கள் கருவியாகத் திகழும்.

பாசநீக்கம் :

(10) பெண்ணையாறு பாய்கின்ற திருவெண்ணெய்நல்லூருக்குத் தலைவரே! கன்மங்கள் தமக்குள் சமநிலைப்பட்டு, இருவினையொப்பு எய்திய நிலையில், நீரே எனது மலத்தினை நீக்கி, ஆன்ம தரிசனம் நிகழ்வித்து எனக்கு உள்ளே புகுந்து உயிர்க்குயிராய் நின்றருளினீர். ஆதலின் நும்மை விட்டு நீங்காமல், நும்முடன் யான் என்றும் நிலைபெற ஒன்றி நிற்றல் வேண்டும்.

ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களின் சேர்க்கையால், யாம் உன்னுடன் ஒன்றி நிற்றலிலம் என்று கூறுவீராயின், அம்மலங்கள் எளியேனை விட்டு எக்காலத்தும் நீங்காமல் நிலைபெறும். அதனால் என்றும் யான் நும்முடைய திருவடியைச் சேர்தல் இலனாகி, பிறப்பு இறப்புக்களிற் பட்டு உழலுவேன்.

அற்றன்று, பிறந்த பிறப்பிற்கு உரிய பிராரத்த கன்மம் அனுபவிக்கப்படுமேயன்றி, இனி உடலெடுப்பதற்குக் காரணமாக ஆகாமிய கன்மம் வளராது என்று அருளிச் செய்தால்—, பிராரத்த கன்மத்திற்கு ஈடாக எடுத்த உடல் உள்ளளவும், அதன் காரணமாகிய மாயை நீங்காது; மாயை உளதாயின் கன்மமும் நீங்காது. மாயையும் கன்மமும் உளவாயின், ஆணவ மலமும் உண்டு எனப்படும். இங்ஙனம் மூன்று மலங்களும் உளவாதல், ஆகாமிய கன்மங்கள் வளர்ந்து அவற்றை அனுபவித்தற் பொருட்டு, மேலும் மேலும் உடற்றொடர்ச்சி குன்றாமல் தொடர்ந்து இருந்துவரும். அவ்வாறாயின், புண்ணிய பாவங்கள் தம்மில் ஒன்றுக்கொன்று சமநிலை அடைதலாகிய இருவினையொப்பு நேர்ந்தாலன்றி, இறைவனை ஆன்மாக்கள் எய்துதல் இயலாது, எனச்சமய தத்துவ நூல்கள் கூறும் கூற்றுப் பொருந்தாமற் போகும்.

ஆதலின், உடலின் தொடக்கு உற்றுநிற்கின்ற அடியேனுக்குத் தேவரீர் தீக்கை முறைகளினால் பாச நீக்கம் செய்திருக்கவும், அடியேன் மீளவும் மலமாயை கன்மங்களுடன் தொடர்புற்று உழன்று வருந்துதலுக்கு, யாது காரணம்? என்று அருளிச செய்தல் வேண்டும்.

ஆசாரியன் செய்யும் தீக்கையினால் சஞ்சித கன்மம் அழியும். உடலுள்ள அளவும் இன்ப துன்பங்களை அனுபவிப்பதனால், பிராரத்த கன்மம் நீங்கும். குருவருளாலும் திருவருளாலும் உண்டாகும் ஞானத்தின் மேலீட்டால், ஆகாமிய கன்மம் அழிந்தொழியும். இருவினையொப்புக்கு உடல் முன்னிலையன்று, இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் அற்று, இரண்டையும் ஒன்றாக விருப்பு வெறுப்பின்றி ஏற்றுக் கொள்ளுகின்ற, நடுவு நிலைமையாகிய சாந்தம் என்னும் மன நிலைமையே, இருவினையொப்பு எனப்படும். அவ்விரு வினையொப்பு என்னும் நிலை எய்து மாயின், இறைவனே குருவடிவில் வந்து அருள்புரிந்து காத்தருள்வன். பாசம் அழிவதில்லை, அதன் ஆற்றல் மட்டுமே அழிந்து நிற்கும் என்பது இப்பாடலின் கருத்து.

—தொடரும்.

திருச்செந்தூர்க் குடமுழுக்கு விழா

(வாழ்த்துச் செய்தி)

திரு. கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S.
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

திருச்செந்தூர், செந்தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் முருகப்பெருமான் எழுந்தருளி விளங்கும் புகழ்மிக்க சிறந்த தலங்களுள் ஒன்று, முருகப் பெருமான் வீரர்களுக்குள் தலைசிறந்த பெருவீரனாகத் திகழ்பவன். அவன் தன் அடியார்களின் இடர்களாகிய பகைகளைக் கடிந்து நீக்குதலிலும், அவர்களைப் பாதுகாத்து இன்பநலன்களை அருளி ஆக்கம் புரிவதிலும், இணையற்ற பெருமானாக விளங்குகின்றான்.

ஆதலின் அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களைப் படைவீடுகள் என்று பெரிதும் சிறப்பித்து, தொன்றுதொட்டு நம் தமிழ்ச் சான்றோர்கள் பலரும் பாராட்டிப் போற்றி வருகின்றனர்.

அங்ஙனம் முருகனுக்குரிய படைவீடுகளாகப் போற்றி வழிபடப் பெறுவன, முறையே திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பனவாகும்.

சங்கத்தமிழின் தலைமைப் புலவராகிய நக்கீரர், திருமுருகாற்றுப்படை பாடிய காலம் முதல், அத்திருமுருகாற்றுப்படையின் அமைப்பைத் தழுவி, மேற்குறித்து ஆறு தலங்களையும் படைவீடுகள் எனச் சிறப்பாகக் குறிப்பிடும் மரபு ஏற்பட்டு வழங்கி வருகின்றது.

கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார், திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் முதலிய அனைவரும், நக்கீரரின் திருமுருகாற்றுப்படையைத் தழுவி இந்த ஆறு தலங்களாகிய படைவீடுகளின் வரிசைமுறையினை, மாறாமல் கூறிப் போற்றித் துதித்துள்ளனர்.

திருச்செந்தூர் என்னும் தலம் நக்கீரரால் ''ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்'' எனக் குறிக்கப்பெற்றுள்ளது. கடலின் அலைகள் வந்து மோதுகின்ற இடத்தில் கோயில் கொண்டிருப்பதனால், இத்தலத்திற்கு அலைவாய் என்னும் பெயர் அமைந்தது மிக மிகப் பொருத்தமாக இருக்கின்றது.

முருகன் எழுந்தருளி விளங்கும் செம்மையான இடம், செம்மையான சிறந்த ஊர் என்னும் பொருள்களிலேயே, செந்தில் என்றும், செந்தூர் என்றும், இத்தலத்திற்குப் பெயர்கள் வழங்குகின்றன. முருகன் சூரபதுமனை வென்று, ஜெயம் கொண்ட இடம் ஆதல் பற்றி, இதற்கு ஜெயந்தி என்ற ஒரு காரணப் பெயரும் உண்டு. அதுவே தமிழில் செந்தி என மருவி வழங்கி வருகின்றது என்றும் கூறுவர்.

திருச்செந்தூர், ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முற்பட்ட சங்க நூல்களாகிய அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் என்னும நூல்களிலும் புகழ்ந்து போற்றப் பெற்றிருக்கின்றது. மருதன் இளநாகனார் என்னும்

சங்ககாலப் புலவர், பாண்டிய மன்னன் ஒருவனை வாழ்த்தும் போது, ''நீ நெடுவேளாகிய முருகன் நிலைபெற்று விளங்குகின்ற அழகிய அலைவாய் என்னும் திருச்செந்தூர்க் கடற்கரையில் உள்ள எக்கர் மணல் மேடுகளின், நுண்ணிய துகள்களைப்போல, எண்ணற்ற நெடுங்காலம் நீடினிது வாழ்வாயாக'' என்னும் கருத்தமையப் பாடுகின்றார்.

> ''நீ நீடு வாழிய நெடுந்தகை! தாழ்நீர்
> வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
> நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
> கடுவளி தொகுப்ப ஈண்டிய
> வடுவாழ் எக்கர்மணலினும் பலவே''

எனவரும் புறநானூற்றுப்பாடற் பகுதியினால், மிகப் பழங்காலத்திலேயே திருச்செந்தூர் எவ்வளவு புகழ்பெற்றுத் திகழ்ந்தது என்று விளங்கும்.

முருகன் தன் அடியார்களுக்கு எல்லாத் தலங்களிலுமே அருள் புரிகின்றனன் ஆயினும், அவனது அருட் பேற்றிற்குத் திருச்செந்தூர், தனிப்பெரும் சிறப்புடைய தலமாக விளங்குகின்றது எனலாம். ஆறு படை வீடுகளில் அருள் வழங்குதற்கென்றே அமைந்த சிறப்புத் தலம்திருச்செந்தூர் எனக்கூறின், அதுமிகையாகாது. ஏனெனில திருச்செந்தூரில்தான் முருகன் அருளே வடிவமாகவும், கருணை வெள்ளமாகவும் வீற்றிருக்கின்றான்.

> "செந்தூ ரிற் போய்க் கருணை
> வெள்ளமெனத் தவிசின் வீற்றிருந்து''

எனக் குமரகுருபர சுவாமிகள், கந்தர் கலிவெண்பாவில் பாடியிருத்தல், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், திருச்செந்தூர்க் கலம்பகம் பாடிய சுவாமிநாத தேசிகர், கந்தர்கலிவெண்பா அருளிய குமரகுருபரர், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் இயற்றிய பகழிக்கூத்தர், திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி பாடிய சிவப்பிரகாசர். திருச்செந்தூர் அகவல் அருளிய திருச்சிற்றம்பல நாடிகள், திருச்செந்தூர்ப் புராணம் பாடிய வென்றிமாலைக் கவிராயர், சுப்பிரமணிய புஜங்கம் இயற்றிய ஆதிசங்கரர் முதலிய தவநலச் சான்றோர்கள் அனைவரும், முருகனை வழிபட்டுப் பேறு பெற்ற தலம் திருச்செந்தூரே என்பது, நாம் நினைவு கூரத்தக்கது.

இத்தகைய பெரும் சிறப்பு வாய்ந்த திருச்செந்தூரில், செந்தில் ஆண்டவன் திருக்கோயிலில், அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா, 24. 6. 71 அன்று காலை நடைபெற இருப்பது. அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கின்ற ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

கும்பாபிஷேக விழா மிகவும் சிறப்புற நிகழவும், அதனால் உலக மக்கள் அனைவருக்கும் எல்லா நலன்களும் விளையவும், செந்தில் ஆண்டவன் திருவருளை மனமொழி மெய்களால் நினைந்து வழுத்தி வணங்குகின்றேன்.

இளையனூர் வேலூர்க் குடமுழுக்கு விழா

(வாழ்த்துச் செய்தி)

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.,
ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட, தொண்டைநாட்டின்கண் உள்ள, முருகனுக்குரிய சிறந்த தலங்களுள், இளையனூர்வேலூர் என்பது ஒன்றாகும். முன்பு ஒரு சமயம் காசிப முனிவர் உலக நலங்கருதி, வேள்வி ஒன்று இயற்றத் தொடங்கினார். அவ்வேள்வி இனிது நிறைவேறாதபடி மலையன், மாகறன் என்னும் இரண்டு அசுரர்கள் இடையூறு புரிந்தனர். அதனால் வருந்திய காசிபர், காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள கடம்பூர் என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்கும் கடம்பேசுவரர் ஆகிய சிவபெருமானை வழிபட்டார். அவருக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு அருள்புரிந்து திருமாகறல் என்னும் தலத்தில் கோயில்கொண்டுள்ள முருகப்பெருமானை அனுப்பி, மலையன் மாகறன் என்னும் அவ்விரண்டு அசுரர்களையும் அழித்து வருமாறு கட்டளையிட்டார்.

முருகப்பெருமான் அங்ஙனமே சென்று தமது வேலாயுதத்தால் அவ்வசுரர்களைக் கொன்று, அவ்வேற்படையை நிலைநாட்டிப் பிரகாசிக்கச் செய்து, தன்னை வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்தற்பொருட்டு நிலையாகத் தங்கி இருக்க முற்பட்ட சிறப்புடைய தலமே, இளையனூர்வேலூர் என்னும் பெயரால், இன்றும் விளங்கி வருகின்றது. முருகன் அடியார்கள் பல்லாயிரவர் இத்தலத்திற்குச் சென்று அன்புடன் வழிபட்டுப் பற்பல நலன்கள் பெற்று வருகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க இளையனூர் வேலூர்த் திரு பாலசுப்பிரமணியசுவாமி கோயிலில், திருப்பணிகள் பல செய்யப்பெற்று, விரோதிகிருது ஆண்டு, ஆனித் திங்கள் இருபத்தொன்றாம் நாள் (5-7-71) திங்கட்கிழமை அன்று, திருக்குடமுழுக்கு விழா நிகழவிருப்பது முருகனடியார்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

குடமுழுக்கு நன்கினிது சிறப்புற நடைபெறவும், குடமுழுக்கு விழாச் சிறப்பு மலர் பயன்மிக வெளிவரவும், உலக மக்கள் அனைவருக்கும் நலம்பல விளையவும், இளையனூர் வேலூர்ப் பெருமான் திருவருள் புரியுமாறு மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

உலகச் சமயங்களின் மாநாடு*

திருவாசகமணி திரு. கே எம் பாலசுப்பிரமணியம், B. A, B. L.
தில்லைநகர், திருச்சிராப்பள்ளி

உடன்பிறப்பாளர்களே!
உடன் பிறப்பாட்டியர்களே!!

இந்தப் புனிதக் கேரள மாநிலத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க, உலகச் சமயப் பெருமன்ற மாநாடு நடைபெறுகின்ற, இந்த நல்ல நேரத்தில், உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தப் பெருமன்றம், எந்த நோக்கம் குறித்து நடத்தப் பெறுகின்றதோ, அந்த நோக்கம் குறித்தே, அதாவது உலகின்கண் உள்ள பல்வேறு சமயங்களுக்கும் இடையில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துதல் வேண்டுமென்ற நோக்கத்தையே குறிக்கோளாகக் கொண்டு, யான் கடந்த ஆறு மாதங்களாக இந்தோனேசியாவிலும், மலேசியாவிலும், சமயப் பிரச்சாரப் பணியைச் செய்து கொண்டிருந்தேன். அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால், யான் இந்த மாநாட்டின் தொடக்க முதலேயிருந்து கலந்து கொள்ளவும், நான் சார்பாளராக இருக்கின்ற சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கைபற்றிய சில ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்கவும், வாய்ப்புப் பெற்றிருந்திருப்பேன். இங்கே இந்தப் பெருமன்றத்தில், தவத்திரு குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களைத் தலைவராகக் கொண்டதும், தமிழ் நாட்டின்கண் உள்ள இந்து சமயத் தலைவர்களாகிய மடாதிபதிகளின் மிகவும் அதிகார பூர்வமான சங்கமும் ஆகிய தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பாளராகக் கலந்து கொள்ளும் பெரும் பேற்றினை யான் பெற்றிருக்கின்றேன்.

சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, இந்து சமயத்தின் ஒரு பெரிய பழமையான பிரிவாக இருந்த போதிலும், அதன் ஆதரவாளர்களாலும், அதனைப் பின்பற்றுபவர்களாலும், ஏனைய பிற நாடுகளில் இல்லாவிட்டாலும்கூட, இந்தியாவின் எல்லாப் பகுதிகளில் மட்டுமாவது, மக்களிடையில் பரப்பவோ விளம்பரம் செய்யப்படவோ இல்லை. இந்துக்களிற் பெரும்பாலானவர்களின் உள்ளத்தில், சைவ சித்தாந்தம் ஒரு வைதிக மதக் கொள்கையன்று, என்னும் ஒரு தவறான கருத்து இருந்து வருகின்றது. இது ஒரு சிறிதும் அடிப்படையற்ற தவறான கருத்தாகும். சங்கரரின் அத்வைதமும், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதமும் போலவே, இதுவும் வேதங்கள் உபநிடதங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றது. இக் கொள்கையின்படி

---

* கேரள மாநிலத்தில், சாத்தன்கோட்டை என்னும் இடத்தில் நடைபெற்ற "உலகச் சமயங்களின் மாநாடு" என்னும் அறிஞர் திருக்கூட்டத்தில், திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல். அவர்கள் 2. 4. 71 அன்று நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவின் தமிழாக்கம். மொழிபெயர்த்தவர். ந. ரா. முருகவேள்.
—ஆசிரியர்.

அடிப்படையானவையும், என்றும் உள்ளவையு மான மூன்று பொருள்கள் உள்ளன. அவைகள் முறையே கடவுள் உயிர் உலகம் அல்லது பதி பசு பாசம் எனப்படும். இறைவன் உலகைப் படைப்பதன் நோக்கம், அநாதியாகவே ஆணவ மலமாகிய இருளால் சூழப்பெற்றுள்ள ஆன்மா அல்லது உயிரை, அதனினின்று மீட்டு விடு விப்பதும், இறைவனோடு ஒன்றுபடச் செய்வது மேயாகும். இங்ஙனம் ஆணவ மலத்தினின்று விடுபட்டு, ஆன்மா இறைவனுடன் ஒன்று சேர்தலாகிய முத்தி நிலையை அடைதற்குரிய வழிவகைகளாகிய சாதனங்கள், நூல்களில் மிக விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. ஆன்மா வும் கடவுளும் இரு பொருளே யாயினும், அவற்றிற்கிடையே உள்ள தொடர்பு. 'நத்வைதம்' எனப்படும் இரண்டற்ற தன்மை ஆகும். முத்தி அல்லது வீடு பேற்று நிலையில் ஆன்மாவானது என்றும் நிலைபேறுள்ள இன்பத் தையும் அமைதியையும் நுகர்கின்றது. ஆனால், தான் அவ்வாறு நுகர்வதை அஃது உணர்வ தில்லை. அதாவது முக்தி நிலையில் ஆன்மா வானது தனது தனித்தன்மையை விட்டொழிக் கின்றது ; ஆனால் தனக்கு இயல்பான தன்மையை விடாமல் இருத்தி வைத்துக் கொள்ளுகின்றது.

சைவத்தின் இந்தத் தத்துவக் கொள்கை யானது, பிற சமயங்களின் எல்லா நற்கூறுகளை யும் தழுவி இணைத்துக் கொண்டுள்ளது ; அதன் கடவுளாகிய சிவமும், அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்க பொதுமை நல்லியல் புடைய கடவுளேயாவர். அவர் எவரையும் விலக்குபவரோ, அல்லது ஒரு பிரிவினர் அல்லது பிரதேசத்தினர் ஆகியோர்க்கு மட்டுமே உரியவரோ, அல்லர். அதனால்தான், உண்மை யும் அறிவுவிளக்கமும் மிக்க சைவர்கள் அனை வரும், கடவுட் கொள்கையுடைய எல்லாச் சமயங்களின் சமத்துவமும் இணைப்பும் ஆகிய கொள்கையை ஏற்றுத் தழுவிக் கொள்ளும் சிறந்த நல்லியல்புடையவராக இருக்கின்றனர். சிவபெருமான் மதுரையில் ஓர் அராபிய முஸ்லிம் வடிவங்கொண்டு குதிரை வணிகராகத் தோன்றினார் என்று சொல்லப்படுகின்றது. ஸ்ரீரங்கத்திலுள்ள மகாவிஷ்ணு ஒரு முஸ்லிம் இளவரசியை மணம் புரிந்துகொண்டார் என்று கூறப்படுகின்றது.

இத்தகைய வரலாற்றுத் தொடர்புகளும், ஒருமைப்பாட்டு அடையாளங்களும் ஒருபுறம் இருக்க, கடவுட் கொள்கையுடைய உலகப் பெரும் சமயங்களாகிய இந்து மதம், இசுலாமியம், கிறித்தவம் என்பனவற்றிற் கிடையே பற்பல ஒப்புமைக் கருத்துக்களும் கொள்கைகளும், காணப்படுகின்றன.

கடவுள் ஒளிவடிவினர் :

திருக்குரான் கடவுளைப் பின்வருமாறு வரையறை இலக்கணம் செய்து குறிப்பிடு கின்றது: ''அல்லா, விண்ணுலகத்திற்கும் மண்ணுலகத்திற்கும் ஒரு பெரும் ஒளியாக விளங்குகின்றார்; அவருடைய பேரொளியானது ஒரு மாளிகையின் மாடத்தின்கண் உள்ள ஒரு விளக்கு, அம்மாளிகை முழுவதற்குமே ஒளி பரப்புவதுபோல, இவ்வுலகங்கள் எல்லா வற்றிற்கும் வெளிச்சம் அளித்துக் கொண் டிருக்கின்றது''.

இயேசுநாதர் "நானே ஒளியாக இருக்கின் றேன்; நானே வழியாக இருக்கின்றேன்'' என்று கூறுகின்றார். கார்டினல் நியூமன் ' ஒளியே அன்புடன் வழிகாட்டு; அன்புடன் மேலே வழி காட்டு'' என்று தன்னுடைய கடவுளை விளிக்கின்றார்.

இந்து மதத்தில் மாணிக்கவாசகப் பெரு மான், ''சோதியே சுடரே சூழொளி விளக்கே'' என அழைக்கின்றார். அப்பரடிகள் ''தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே, திருவையாறு அகலாத செம்பொற் சோதீ'' என்று தமது கடவுளைக் குறிப்பிட்டு, அவர் எல்லா உலகங் களுக்கும், எல்லாருடைய உள்ளங்களுக்கும், வீடு களுக்கும் ஒளியாகத் திகழ்தலை உணர்த்து கின்றார். ''சூரியனோ, சந்திரனோ, விண் மீன்களோ அல்லது மின்னல்களோ, தாமாகப் பிரகாசிப்பதில்லை. அவற்றின் ஒளிகள் பரப்பிரம்மத்தின் பேரொளிக்கு மிகவும் குறைந் தனவேயாகும்; பிரம்மம் ' ஒளி வீசுகின்ற

பொழுது, அவரைப் பின்பற்றியே எல்லாப் பொருள்களும் ஒளி பரப்புகின்றன; பிரம மத்தின் ஒளியினாலேயே இங்குக் கீழேயுள்ள எல்லாப் பொருள்களும் ஒளி பெறுகின்றன'' என்று உபநிடதங்கள் முழங்குகின்றன.

உயிர்களுடன் கடவுளின் நெருக்கம் :

''கடவுளின் அரசு உனக்கு உள்ளேயிருக் கின்றது'' என்று இயேசுநாதர் இயம்புகின்றார். ''அவரது கழுத்துப் பெரு நரம்பின் இரத்த நாளத்தையும்விட, நாம் அவருக்கு மிக மிக நெருங்கிய அணுக்க நிலையில் இருக்கின்றோம்'' என்று நபிகள் நாயகம் நவில்கின்றார். இந்து சமயத் தலைவராகிய அப்பரடிகள், ''சிவபெரு மானே என்னுடைய உயிர் மூச்சு; அவன் என் மூச்சுக்காற்றாக உள்ளே சென்றும் வெளியே வந்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றான்' என்னும் கருத்தில் ''என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே'' என்று பாடுகின்றார்.

இறைவனின் திருவருள் :

''அல்லா யாரை விரும்புகின்றாரோ அவரை நம்பச்செய்கின்றார், அல்லாவின் அனுமதி இருந் தாலன்றி எந்த ஓர் உயிரும் எதனையும் நம்புத லாகாது; அல்லா எவருக்கு வழிகாட்டியருள விரும்புகின்றாரோ, தன்னிடம் சரண் புகுந்த அவருக்கே தனது இதயத்தை விரிவு படுத்தி ஏற்று அருள்புரிகின்றார்'' என்று திருக் குரான் இயம்புகின்றது. ''பலர் அழைக்கப் படுகின்றனர்; ஒரு சிலர் மட்டுமே தேர்ந்தெடுக் கப்படுகின்றனர்'' என்று விவிலிய நூல் சாற்று கின்றது. ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்று மாணிக்கவாசகர் பாடு கின்றார்.

கடவுளின் கையேடு :

''உங்களுடைய இறைவனுக்கு, இந்நில வுலகத்தினது அல்லது வானுலகத்தினது ஓர் அணுவினுடைய சிறிய எடையும், அல்லது அணுவைவிடச் சிறியதும் அல்லது அதனைவிடப் பெரியதும் ஆகிய எதுவும் தெரியாமல் தப்புவ தில்லை. ஆனால் அதன் அனைத்து விவரமும் ஒரு தெளிவான புத்தகத்தில் எழுதப்பெற்றுள்ளன'' என்று திருக்குரான் கூறுகின்றது. ''மனிதர்கள் தாம் பேசுகின்ற ஒவ்வொரு பயனில் சொல்லுக் கும்கூட, தீர்ப்புநாளின்போது அவர்கள் கணக்குக் காட்ட வேண்டியிருக்கும்; ஏனெனில், உங்களுடைய சொற்களினால் நீங்கள் நேர்மை யானவர்கள் என்று போற்றப் பெறுவீர்கள்; உங்களுடைய சொற்களினாலேயே நீங்கள் குற்றவாளிகள் என்று தூற்றப்பெறுவீர்கள்'' என்று விவிலிய நூல் விளம்புகின்றது.

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின்
றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர்
ஈசனே''

என்று அப்பரடிகள் அருளிச் செய்கின்றார்.

உயிர்களுக்கும் கடவுளுக்கும் ஊழியம் :

''நீங்கள் உங்களைப் படைத்தவரை நேசிக் கின்றீர்களா? நேசித்தால், உங்களுக்கு அயலில் உள்ளவர்களை முதலில் நேசியுங்கள். பெற் றோரற்ற பிள்ளைகளைப் பொறுப்பேற்று யார் அன்புடன் காப்பாற்றுகின்றார்களோ, அவர்கள் தீர்ப்பு நாளின்போது எனக்கு அருகில் என் னுடன் இருப்பார்கள். விதவைகளைக் கவ னித்துக் காப்பாற்றுங்கள். ஓர் உயிரை மட்டுமே ஒருவர் காப்பாற்றினாலும், அவர் மனிதகுலம்அனைத்தின் உயிரையுமே காப்பாற்றி யதாக மதித்துப் போற்றப் பெறுவார்'' என்று திருக்குரான் இயம்புகின்றது. இயேசுநாதரும் கூட ''உன்னைப்போலவே உனக்கு அயலிலுள்ள வர்களையும் நேசி'' என்கின்றார். இறுதி நாளின் போது சுவர்க்க உலகிலுள்ள இரக்க நெஞ்சம் படைத்த உயிர்களை நோக்கி, ''என்னுடைய குழந்தைகளில் மிக மிகச் சிறியனவாகிய உயிர்களுக்கும், நீங்கள் செய்த நல்லுதவிகள்

எவ்வளவு ஆயினும், அவ்வளவும் நீங்கள் எனக்குச் செய்தனவேயாகும்'' என்று இயேசு பிரான் இயம்புகின்றார்.

இந்து சமயச் சான்றோர்களில் ஒருவராகிய திருமூலர், ''இறைவனுக்கு இயங்குகின்ற கோயில்களாக உள்ள, உயிர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பொருள் எதுவாயினும், உண்மையில் அது கடவுளுக்குக் கொடுப்பதேயாகும்'' என்னும் கருத்தை வலியுறுத்தி,

'‚படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதாமே''

என்று குறிப்பிடுகின்றார்.

முடிவுரை :

இவ்வாறு, எல்லாச் சமயங்களுக்குமிடையே உள்ள, கொள்கை உடன்பாட்டுப் பரப்பினை விளக்கும் முறையில், இத்தகைய பல எத்தனையோ மேற்கோள்களை மேலும் விரிவாகப் பெருக்கிக் கொண்டு செல்லுதல்கூடும். உலகிலுள்ள எல்லாச் சமயத்தினர்க்கும், மற்றவர்களின் சமயத்தில் உள்ள அன்பையும் ஒளியையும் உயிரையும் காணுவதற்கு உரிய அறிவு விளக்கத்தை அளித்தருளல் வேண்டும் என்றும்; இங்கே நடைபெறுகின்ற இந்த ஒப்புயர்வற்ற உலகச் சமயங்களின் பெருமன்ற மாநாட்டின் பயனாக ஒற்றுமை உணர்வும் நேசமனப்பான்மையும், கொண்ட ஒரு புனித, மனித சமுதாயமும் சகாப்தமும் மிக விரைவில் தொடங்குதல் வேண்டும் என்றும் விரும்பி, எல்லாம் வல்ல பரம்பொருளை, யான் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

நன்றி :

சமயங்களின் புத்துலகத் தோற்றத்திற்காக நிகழ்த்தப்படுகின்ற, இந்தப் புனித தேவ கீதத்தின் குரவைப் பெருநிகழ்ச்சியில், யானும் கலந்துகொண்டு மகிழும்படி வாய்ப்பு அளித்ததற்காக, இந்த மாநாட்டின் அமைப்பாளர்களுக்கு, யான் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்திக் கொள்ளுகின்றேன்.

குடியேற்றம் சந்தைப்பேட்டை ஸ்ரீ சீதாராம ஆஞ்சநேயர் தேவஸ்தான ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில், நமது அறநிலைய ஆணையர். திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S. அவர்கள் கலந்து கொண்டு, உரை நிகழ்த்துதல்,

நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம் கண்ணப்பன் அவர்கள்,
திருவாரூர்க் கோயிலில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப் பெறுதல்.



தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான சீர்காழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி கோயிலுக்கு "நிரந்தரத் தூய்மைச் சுழற்கோப்பைப் பரிசு" வழங்கும் விழாவில், நமது ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

செந்தில் அமர்

முருகன் அருள்

சிறந்து வாழ்க !

ந. ரா. முருகவேள்,
M. A, M. O. L.,

[நமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்களின் 48 ஆவது பிறந்தநாள்விழா நிகழ்ச்சியினை ஒட்டி, இவ்வாழ்த்தியற் பாடல்கள், இங்கு வெளியிடப் பெறுகின்றன.

—ஆசிரியர்]

(அறுசீர் விருத்தம்)

'திருவாரூர்ப் பிறந்தார்கள்' கீர்த்தியினை வியந்துமிகச் சிறந்தெடுத்துப்
பொருவார்தாம் எவருமிலாப் புகழ்நம்பி யாரூரர் போற்றிப் போந்தார்;
மருவாரும் மதித்துவக்கும் மாண்புமிகு நம் முதல்வர், மாகேசன்றன்
அருள்ஆரும் பெருஞ்செல்வர்; ஐயம் இல்லை; இதற்கவர்தம் பெயரே சான்றாம். (1)

(கருணாநிதி—அருட் செல்வர்)

பற்பலநல் எழிற்கவிதை பாடியசீர்ப் பாவேந்தர் பாரதி தாசன்,
"நற்றமிழைக் கற்றுவல்ல நன்மகனே தமிழ்நாட்டின் நலஞ்சிறந்த
பொற்புமிகு முதலமைச்சாய்ப் போதருதல் வேண்டும்" என்றே புகன்று போந்தார்;
அற்புதமாய் அக்கனவை நனவுசெய்தார் நம்கலைஞர்; ஆற்றல் என்னே! (2)

சேரர்களும் சோழர்களும் செந்தமிழ்ப்பாண்டியர்களும்தாம் பலராச் சேர்ந்து,
போரணிகள் பலப்பலதாம் புரிந்தாண்ட தமிழ்நாட்டைப் புகழ்ச்சி ஓங்கச்
சீரணியின் இன்றொருங்கே சேர்த்திணைத்து முழுதாள்வர், சிறந்த வெற்றித்
தார்அணியும் நம்கலைஞர்; தமிழ்த்தாயின் தவப்புதல்வர்: சால்பென் சொல்கேம்! (3)

இனியநல்ல தமிழ்ப்பற்றில் திருஞான சம்பந்தர்; இணையற் றோங்கி
நனிசிறந்த பொதுத்தொண்டில் நாவரசர்; கலைவளர்க்கும் நலத்தின் மாண்பில்
துனியில்புகழ்ச் சுந்தரர்: நற் சொற்றிறனில் மணிமொழியார்; தொன்மை சான்று
கனிதமிழின் தகவுணர்வால் மெய்கண்டார்; கலைஞர்எனக் கருதல் சாலும். (4)

பேரறிஞர் அண்ணாவின் திருப்புகழ்கள் பாடுதலால், பெருமை சான்ற
சீர் அருண கிரிநாதர்; செறிந்தபல குழுக்களையும் சேர்த்திணைத்துச்
சார்பமையத் தழீஇச்செலும்நற் சான்றாண்மைச் சமரசத்தால் தாயு மானார்;
யார்எனினும் ஏழைகளுக்கு இரங்குதலால் இராமலிங்கர்; கலைஞர் ஏறே! (5)

நக்கீரர் சொற்றிட்பம்; இளங்கோவின் கலைநுட்பம்; நலமே சான்ற
தக்கதிரு வள்ளுவர்தம் கருத்தூற்றம்;சம்பந்தர் தமிழ்நல் ஆர்வம்;
மிக்குயாசீர்ப் பாரதியார், பாரதிதா சனார்புரட்சி வீறும் எல்லாம்
தொக்கியலத் தமிழ்வளர்க்கும் தூயபெரு நற்கலைஞ; சுகமே வாழ்க! (6)

விச்சையின்றி விளைவுசெயும் வித்தகன்தான் சிவன்எனினும், மேலும் மேலும்
பிச்சையர்கள் பெருகிவரல் ஒழிக்கறியான் கபாலிஎனப் பெரும்பே றுற்றான்;
கச்சையினை வரிந்துகட்டிக் கனிந்துஅவர்க்கு மறுவாழ்வு கண்டு அமைக்க,
மெச்சுபெருந் திறற்கலைஞ; மேதக்கோய்! நீமுனைந்தாய்! வெற்றி காண்பாய்; (7)

சேக்கிழார், மணிமொழியார், சிறந்தநல்ல குலச்சிறையார், தாயுமானார்,
வாக்கியலும் பசவேசர், மாண்புமிகு முதலமைச்சாய் வயங்கி நின்ற
சீர்க்கியல, நம்கலைஞர் செம்மலுமே முதலமைச்சாய்ச் சிகழ்ந்து, நந்தம்
பாக்கியத்தால் தமிழ்நாட்டை ஆளுகின்றார்; பல்லாண்டு வாழ்க! வாழ்க!! (8)

''நின்நாள் திங்கள் எனநீள்க! நீண்ட திங்கள் ஆண்டாக!
பொன்நேர் ஆண்டோ ஊழிபல போலப் பொலிக'' எனவிரும்பி,
முன்னாள் பதிற்றுப் பத்து[2] எனும்நூல் மொழிந்த வாழ்த்தே போல், கலைஞர்
தன்நேர் இல்லாத் தமிழ்த்தாய்போல், தழைத்து மகிழ்ந்து வாழியவே! (9)

(2. பதிற்றுப் பத்து, 90)

''ஒன்றுடனே பத்தடுக்கல் உற்றபல கோடிஎனும் ஊழி காலம்
நன்றுமிக வாழ்க!'' என நல்ல குட புலவியனார்[3] நயந்து முன்னாள்
நின்றபுகழ்ப் பாண்டியர்கோன் நெடுஞ் செழியன் தனைவாழ்த்தி நெஞ்சு உவந்தார்;
இன்றதுபோல் யாமும்நினை வாழ்த்துகின்றோம்; இனிதே வாழ்திர். (10)

(3. புறநானூறு, 18)

''நீடினிது வாழியரோ நெடுந்தகைநீ, செந்தில்எக்கர் நீள்மணல்போல்,
கோடிபல ஆண்டுகள்தாம் எனக்கூறி, மருதன்இள நாகர்[4] என்னும்
பாடல்வல பெரும்புலவர் பாண்டியனை வாழ்த்திநின்றார்; பண்பார்ந் தோங்கித்
தேடருஞ்சீர்ப் பெருங்கலைஞ! செந்தில்அமர் முருகன்அருள் சிறந்து வாழ்க! (11)

(4: புறநானூறு 55)

ஒன்று

திரு. வ. பெருமாள் M. A., M. R. A. S.,
தமிழ்ப்பேராசிரியர், உரிகம், மைசூர்

'ஒன்று' என்னும் எண்ணிற்குள்ள பல்வேறு சிறப்புக்களை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். கணக்கின் தொடக்க எண்ணாகவும், முதல் எண்ணாகவும் ஒன்றைத்தான் நாம் வைத்திருக்கின்றோம். 'ஒவ்வொன்று நூறு, ஒருமிக்க நூறு?', என்னும் பழமொழி நோக்கத்தக்கது. எனவே, எழுத்துக் களுக்கெல்லாம் அகரம் முதன்மையாக இருப் பதைப் போல, எண்களுக்கெல்லாம் ஒன்று முதன்மையாகவும் மூலமாகவும் இருக்கின்றது.

இறைவன் :

'ஒன்று அவன் தானே, இரண்டு அவன் இன்னருள்' என்பது திருமூலர் திருமந்திரம். இறைவனிடம் உண்மையில் நம்பிக்கை உள்ள வர்கள் 'இறைவன் ஒருவனே' என்னும் தெளிந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். கடவுளைக் குறிக்கின்ற சொற்கள் எல்லாவற்றை யும் ஆராயுமிடத்து அவற்றில் ஒருமை விகுதி இருக்கின்றதே தவிரப் பன்மை விகுதி இல்லை.

அவனன்றி ஓரணுவும் அசையாது.

அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.

அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா?

ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்.

சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி இடங் கொடுக்க மாட்டான்

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

எல்லா உயிரினங்களையும் காக்க ஓர் ஈசன் இருக்கின்றான்.

பிரமன் நினைத்தால் ஆயுள் குறையுமா?

இறைவன் பல பெயர்களால் குறிக்கப் பெற்றாலும், இறைவன் ஒருவனேயாவான் என்பது மிக மிகத் தெளிவு, இவ்வுண்மையை,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு,

என்னும் குறட்பா வாயிலாக நன்கு அறியலாம் இறைவன் எண்ணிக்கையால் ஒருவன், காலத் தால் முதல்வன், எனவே, இறைவனுக்கு 'ஆதி' என்றும் 'மூலம்' என்றும், ஆதிமூலம் என்றும், பல பெயர்கள் ஏற்பட்டன.

ஒன்று என்னும் சொல், முதல் எண்ணைக் குறிப்பதோடு, ஒப்பற்றது என்னும் பொருளை யும் குறிக்கும். "ஆண்டவன் ஒருவன் இருக் கின்றான்" என்பது நாம் அனைவரும் நன்கு அறிந்த பழமொழி. ஆண்டவன் எண்ணிக்கை யால் ஒருவன், பண்பால் ஒப்பற்றவன் என்பதை இப் பழமொழியிலுள்ள 'ஒருவன்' என்னும் சொல் தெளிவாகக் குறிக்கின்றது.

இராமன் அன்புடன் குகனை நோக்கி 'நீ எனக்குத் தோழன்' என்று இயம்பினுன். இராமனது இச் சொல்லைக் குகன் சிறப்பு வாய்ந்த ஒப்பற்ற மொழியாகப் பொன்னே போல் போற்றுவதை இராமயணத்தில் காண லாம்.

'ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர்
போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும்
வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்
ஒரு சொல்லன்றோ
ஏழமை வேடன் இறந்திலன் என்றெனை
ஏசாரோ?''

குலம் :

இவ்வுலகில் ஒரே ஒரு குலம் தான் உண்டு அதுதான் மனித குலம். இப்பேருண்மையை ஞாலத்தில் உள்ள நல்லறிஞர் அனைவரும் முழு மனத்துடன் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கணியன் பூங்குன்றனாரின் கனிமொழியும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலரின் திருமந்திரமும், உலகத்தில் இருப் பது ஒரே குலம் தான என்பதை நன்கு தெளிவு படுத்துகின்றன. இந்த அடிப்படை உண்மையை உணராத அறிவிலிகளும் போலி அறிஞர்களும் மக்களிடையே ஏற்றத் தாழ்வைக் கற்பித்து வேற்றுமையை உண்டாக்கி விட்டார்கள். இதன் விளைவாகத் தீமைகள் பல ஏற்பட்டன. அத் தீமைகளை அகற்றி நன்னெறியை மீண்டும் ஏற்படுத்தப் பலர் முயன்றனர். அத்தகை யோருள் இராமலிங்க அடிகள், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் கள் ஆவர் எனலாம்.

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும்
எவரும்
ஒருமையுள ராகிஉல கியல் நடத்தல்
வேண்டும்''

என்று இராமலிங்க அடிகள், மனித குலத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறார்.

உண்மை :

'உண்மை' என்ற சொல்லிற்கு ஆழமாகவும் பல்வேறு வகையிலும் பொருள் கூறலாம். ஆழ்ந்து நோக்கும்போது அடிப்படையில் ஒரே உண்மைதான் இருக்கும். அவ்வுண்மை மாருத உண்மை, நிலைத்த உண்மை, எங்கும் நிலை பெறுகின்ற பேருண்மை; முக்காலத்திற்கும் பொருந்துகின்ற முழு உண்மை. அதுவே உலகப் பொது உண்மை, வாய்மையே வெல்லும்' என்பது மெய்ஞ்ஞான உண்மை. இவ்வுண் மைக்கு மாருக உலகில் வேறொன்றும் இல்லை. மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றும் ஒன்ருக இருப்பதே உண்மை எனப்படும். சொன்ன சொல்லை மறைக்காமல் மறுக்காமல் காப்பாற்றிய உண்மை நெறியை அரிச்சந்திரன் வாழ்க்கையில் காணலாம். புறத்தைத் தூய்மை யாக்குவது தண்ணீர்; அகத்தைத் தூய்மை யாக்குவது வாய்மை. இவ்வருங் கருத்தைத் திருக்குறள் இனிது இயம்புகின்றது.

''புறந்தூய்மை நீரால் அமையும்; அகந்
தூய்மை
வாய்மையாற் காணப் படும்',

மக்கள் உள்ளொன்று வைத்துப் புற மொன்று உரைக்காமல் உள்ளவாறே உரைத் தல் வேண்டும் என்று நம் சமய இலக்கியங்களும் நீதி நூல்களும் ஒருங்கே இயம்புகின்றன. எனவே உண்மைக்கு 'ஒருமொழி' என்ற நற் பெயரும் நாளடைவில் ஏற்பட்டுவிட்டது. 'ஒருமொழி அன்னை' என்பது வில்லிபுத்தூரார் வாக்கு. மனிதனுக்கு முப்பத்திரண்டு பற்கள் உள்ளன. கை, கால், கண், காது மூக்குத்துளை ஆகியவை இரண்டு இரண்டாக அமைந் துள்ளன. ஆனுல் ஒரே ஒரு நாக்கு மட்டும்தான் இருக்கின்றது. இதன் உட்பொருள் என்ன? ஏனைய உறுப்புக்களை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும். ஆனுல் பேசுவதற்குப் பயன்படும் நாக்கைமட்டும் மிகக் குறைவாக—கணக்காக—அளவுடன்—மிகவும் நிதானமாகப் பயன்படுத்த வேண்டும். இரு உதடுகளுக்கு உள்ளே பற்களும், பற்களுக்கு உட்புறத்தில் நாக்கும்

அமைந்திருக்கின்றது. மிகவும் பத்திரமாக அமைந்துள்ள நாக்கை மிகவும் பத்திரமாய்ப் பயன்படுத்த வேண்டும். எனவே தான் திருவள்ளுவரும்,

''யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு''

என்று கூறியுள்ளார். ஒரு நாக்கிலிருந்து வரும் மொழி ஒருமொழியாக (உண்மை மொழியாக) இருத்தல் வேண்டும், என்பது சொல்லாமலே விளங்கும். ''உனக்கு ஒரு நாக்கா இரண்டு நாக்கா'' என்னும் பழமொழி ஈண்டு நோக்கத் தக்கது.

காதல் :

அன்பின் பிணைப்பே காதல் எனப்படும். கண்கள் இரண்டிருந்த போதிலும் பார்க்கப் படும் பொருள் ஒன்றுதான். இரண்டு காளைகள் வண்டியை இழுத்த போதிலும் செல்கின்ற திசை ஒன்றுதான். தலைவன்-தலைவி, கணவன்—மனைவி, காதலன்—காதலி ஆகியோர் உருவத்தால் இருவராக இருந்தாலும் உள்ளத்தால், உணர்வால், உயிரால் ஒன்றுபட்டவர்களே, இது அடிப்படைக் கொள்கையாகும். இராமனுக்கும் சீதைக்கும் இருந்த ஒரே உள்ளுணர்ச்சியைக் கம்பர் தம் சொல்லோவியத்தில் இனிது விளக்குகின்றார், இதோ அப்பாட்டு :

''எண்ணரு நலத்தினள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும்'' நோக்கினள்.

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்னும் காதல் முறையே நமது பண்பாடாகும். குறுந்தொகை இவ்வருங் கருத்தை இனிது இயம்புகின்றது.

''இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே''

சுருங்கக் கூறுமிடத்துச் செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் இரண்டும் ஒன்றித் தாமாகக் கலப்பதே காதல் நெறியாகும்.

மக்கட் செல்வம் :

இல்லற வாழ்வில் ஒழுகுகின்ற பெண்ணின் உள்ளம் சிதறாத உள்ளமாக இருத்தல் வேண்டும். அத்தகைய கற்புள்ளம் படைத்த நங்கையை ஒருமை மகளிர் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

''ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு''

என்னும் குறட்பா இவண் நோக்கத் தக்கது. இல்லற வாழ்க்கையின் பயன் நன் மக்களைப் பெறுதல். நம்முன்னோர்கள் நன்மக்களைப் பெறவேண்டும் என்று சொன்னார்கள். அதே சமயத்தில் எத்தனை மக்களைப் பெறுவது என்பதையும் மிகத் தெளிவாகக் கணககிட்டுச் சொன்னார்கள். ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டியது ஒரே ஒரு ஆண் குழந்தையும், ஒரே ஒரு பெண் குழந்தையும் தான்.

ஆஸ்திக்கு ஓர் ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணும்
ஆசைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்திற்கு ஓர் ஆணும்

ஆகிய பழமொழிகள் ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கையை நன்கு தெளிவுபடுத்துகின்றன. ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு ஆண் குழந்தையும் (மகனும்), ஒரே ஒரு பெண் குழந்தையும் (மகளும்) இருப்பது வீட்டுக்கு நல்லது; நாட்டுக்கு நல்லது; உலகத்திற்கு நல்லது. இன்றைய குடும்ப நலத்திட்டம், நம் முன்னோர்க்குத் தெரிந்த கருத்துத்தான் போலும்!

உலகத்தில் தோன்றிய நல்லறிஞர்கள் காலம் இடம் மொழி சமயம் ஆகியவற்றால் வேறுபட்டாலும் கருத்து, உணர்ச்சி சிந்தனை ஆகியவற்றால் ஒன்றுபடுகின்றனர். பெரியோர் அனைவரின் சிந்தனையும் ஒன்றாகவே இருக்கும்.

உலகப் பேரறிஞர்களின் கருத்துக்கள் எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்குமிடத்துப் புறத்தே சிலவேறுபாடுகள் தோன்றினாலும், அடிப்படையில் ஒன்றாகவே அமைகின்றன. இப்பேருண்மையை ஔவையார்

''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—
கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்''

என்று செவி இனிக்க நன்கு பாடியிருக்கின்றார்.

கலை :

பல்வேறு இடங்களில் பலவகையான பூஞ்சோலைகள் இருக்கின்றன. அவற்றில் பல வண்ணப் பூக்கள் பூத்து அழகாக மலர்ந்திருக்கின்றன. எங்கெங்கோ அமைந்துள்ள பூந்தோட்டங்களில் யார் கண்ணிலும் படாமல் பூத்துக் குலுங்குகின்ற பல்வேறு பூக்களை ஒன்றாகத் திரட்டுகின்றான் கலைஞன். மலர்களை முறையாகவும் அழகாகவும் தொடுக்கின்றான். நிறம், மணம், அளவு அமைப்பு தன்மை ஆகியவற்றால் வேறுபட்ட மலர்கள் ஒன்றாக இணைந்து அழகுடன் பொருந்தி ஒரே மாலையாகக் காட்சியளிக்கும்போது, அது கண்ணிற்கும் கருத்திற்கும் விருந் தளிக்கின்றது. தோல்கருவி துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி மிடற்றுக்கருவி ஆகியவை ஒன்றி இணைந்து இசைப்பதற்குத் தான் ஒத்திசை என்று பெயர். இசைக் கருவிகள் இசையும்போது இசையாகின்றது. இசையாத போது ஓசையாகின்றது. கலை தன்னளவில் அமைந்துவிட்டால் போதாது. மனித உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகள் எல்லாவற்றையும் திரட்டி ஒரு முனையாக்கிக் கலையின்பத்தை உணரச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்ய வல்லதே உண்மையான கலை.

ஒற்றுமை :

மக்களிடையே வேற்றுமை உண்டு. அவ் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் உயர்ந்த பண்பாடு. கையிலுள்ள ஐந்து விரல்களும் ஒரே சமமாக இல்லை. அளவு உயரம் அமைப்பு ஆகியவற்றில் வேறுபடுகின்றன. ஆனால் தொழிலாற்றும்போது ஐந்து விரல்களும் ஒன்றுபடுகின்றன. உடல் உறுப்புக்கள் எல்லாம ஒற்றுமை என்னும் உறுதியான அடிப்படையில் அமைந்து இயங்குகின்றன. எடுத்துக்காட்டாக நாடகத்தைக் காண்கின்றவன் நடிப்பைக் கண்ணால் காண்கின்றான். உரையாடலையும் இசையையும் செவியால் கேட்டு மகிழ்கின்றான். நாடகத்தின் நுட்பத்தைத் தன் நுண்ணறிவால் அறிந்து அக மகிழ்கின்றான் எனவே நாடகத்தைச் சுவைக்கும்போது அவன் கண் காது கருத்து எல்லாம் ஒன்று பட்டுச் செயலாற்றுகின்றன. தனி மனிதனின் உடல் உறுப்புக்கள் எவ்வாறு ஒன்றுபட்டு ஒத்துழைக்கின்றனவோ, அவ்வாறே ஞாலத்திலுள்ள மக்கள் அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டால் உலகம் மிக விரைவில் நன்னிலை அடைந்துவிடும் என்பது உறுதி.

சமயம் :

உலகத்தில் பல கலைகள் உண்டு. அவற்றில் ஒன்று சமையற் கலை. வன்மையான அரிசியை மென்மையான சோறாகப் பதப்படுத்துகின்ற கலைக்குத்தான் சமையல் என்று பெயர். அதைப் போலவே கல் நெஞ்சைக் கனி நெஞ்சாகப் பண்படுத்துவதே சமயம். மனம் போன போக்கெல்லாம் போகாமல் ஐம்புலன்களையும் அடக்கி, ஒன்றுபடுத்தி ஒரே நன்நெறியில் செலுத்தத் துணைபுரிகின்றது சமயம்.

'ஒன்றாகக் காண்பதே காட்சி, என்பது ஔவையார் வாக்கு. சிவன் சிறப்பாக உறைகின்ற ஒரே ஒரு மலை கயிலை மலை, அவன்

சூடுவது ஒரே ஒரு மதி (திங்கள்). அவன் கையில் இருப்பது ஒரே ஒரு மண்டை ஓடு. அவனுடைய ஒரே ஒரு ஊர்தி காளை வாகனம் ஆகும். இக்கருத்தை அப்பர் இனிது பாடு கின்றார். இதோ அப்பர் பாடல்,

"ஒன்றுகொ லாம்அவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொ லாம்உய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாம் இடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாம்அவர் ஊர்வது
தானே"
—தேவாரம்.

எல்லாம் வல்ல ஆண்டவனை வழிபடுங்கால மனம், மொழி. மெய், ஆகிய மூன்றும் ஒரு வழிப்பட்டு வணங்குதலே சாலச் சிறந்தது. அத்தகைய வழிபாடு தான் பக்தி எனப்படும். பக்தி நெறியில் சென்றால் முக்தி அடையலாம் என்பது சமயப் பெரியோர்களின் தெளிந்த முடிவு. மனிதப் பிறவியின் பயன் நன்னெறி யில் வாழ்ந்து இறைவனோடு ஒன்றுபடுவதே என்று நம் சமய நூல்கள் தெளிவுபடுத்து கின்றன. சமயம் என்பது நெறி; நன்னெறி; செந்நெறி, இறைநெறி, மனத்தை ஒன்றுபடுத்த உதவும் ஒரே நெறி: 'ஒன்று' நமக்கு உணர்த்தும் பல்வேறு நீதிகளை உள்ளத்தி ல் கொண்டு ஒப்பற்ற வாழ்வு வாழ்வோம்.

செய்திச் சுருக்கம்

உலகச் சமயங்களின் மாநாடு, சமயங்களின் ஒற்றுமை உணர்வின் பொருட்டு, அகிலபாரத ஐயப்ப சேவா சங்கத்தின் ஆதரவில் கூட்டுவிக்கப்பெற்றது. அது, கேரள மாநிலத்தில், கொல்லம் நகருக்கு அருகேயுள்ள சாத்தன்கோட்டையில், 1971 மார்ச்சு மாதம் 24-ம் தேதி முதல், 1971 ஏப்ரல் 2-ஆம் தேதி வரையில். 10 நாட்கள் அதற்கென்று தனியே சிறப்பாக அமைக்கப் பெற்ற மாபெரும் பந்தலில் சிறப்புற நடைபெற்றது. இந்தியா முழுவதிலும் இருந்தும், அமெரிக்கா சுவிட்சர்லாந்து இங்கிலாந்து சிலோன் பெல்ஜியம் கார்சிகா முதலிய அயல்நாடு களிலிருந்தும், ஏறத்தாழ 200 (இருநூறு) பிரதிநிதிகள், இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். உலகத்தின் பெரும் சமயங்கள அனைத்துக்கும் உரிய சார்பாளர்கள், இம்மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

முதல் எட்டு நாட்கள், சமயத்தின் பல்வேறு கூறுகளையும் பற்றிய 67 ஆராய்ச்சிக் கட்டுரைகள், சார்பாளர்களால் படிக்கவும் ஆராயவும் பெற்றன. ஏராளமான பார்வையாளர்கள் இப்பத்து நாள் நிகழ்ச்சிகளுக்கும் வந்திருந்து கண்டுகளித்தனர்.

ஏப்ரல் மாதம் 2-ஆம் தேதி பிற்பகலில் நடைபெற்ற நிறைவு வாழ்த்தியற் கூட்டத் திற்குத் திரு. எம். கே. கே. நாயர், தலைமை தாங்கினார். சுவாமி நித்திய சைதன்யவதி. டாக்டர் ஆல்பர்ட் நம்பிய பெரம்பில், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், ஆர்ச்பிஷப் மார் கிரிகரிசு, திரு. என். எம். அன்வார், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த குமாரி பிபோரா, பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சர்தார் ஷேர்சிங்ஷீர் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர்.

நிறைவு வாழ்த்தியற் கூட்டத்திற்கு மட்டுமல்லாமல், இந்த சமயப் பெரும் மாநாட்டிற்கும், தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் பிரதிநிதியாகச் சென்றிருந்த திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் சொற்பொழிவு, ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்தது.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், சைவசித்தாந்தத்திற்கே உரிய தனிச் சிறப்புக் கூறு களைப்பற்றி விரித்துரைத்து விளக்கியதுடன், இஸ்லாமியம் கிறித்தவம் இந்துமதம் ஆகியவற்றின் போதனைகளிலும் கொள்கைகளிலும் உள்ள சிறப்பான ஒப்புமைக் கூறுகளைப் பற்றியும் அழகுற ஆராய்ந்து எடுத்துரைத்தார். திரு. என். எம். அன்வர் அவர்கள், இந்தச் சொற்பொழிவை "மிகவும் சொல்வன்மை நிறைந்த, சிறப்பு வாய்ந்த, வியக்கத்தகுந்த சொற்பொழிவு" என்று புகழ்ந்து போற்றினார். ஆர்ச் பிஷப் மார் கிரிகரீசு அவர்கள், "எல்லாவற்றிலும் மேம்பட்டது" என்று கூறிப் பாராட்டினார். சைவசித்தாந்தத்தைப் பற்றி, உலகச் சமயங்களின் அரங்கில் முதன்முதலாக நிகழ்ந்த சொற்பொழிவு இதுவேயாகும்.

—ஆசிரியர்.

அபிராமி அந்தாதி

(முற்றொடர்ச்சி)

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

''அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்,
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன்; நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன்; எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றிலேன், என்கண் நீ வைத்தபேர் அளியே''

(பொழிப்புரை) அபிராமி அம்மையாகிய இறைவியே! அறிவு ஒன்றும் இல்லாதவனாகிய நான், தெய்வங்கள் அனைத்தும் நினக்குப் பணிந்து குற்றேவல் புரிகின்ற நின்னுடைய பரிவாரங்களே யாவதனால், உன்னைத் தவிர வேறொருவரையும் யான் தெய்வமாகக் கருதி வணங்க மாட்டேன். என்னுடைய உள்ளத்தில் அவர்களை ஒரு பொருளாக மதித்து வாழ்த்த மாட்டேன். நின்னை வழிபட்டு உய்யமுயலாத, வஞ்சகர்களாகிய தீயவர்களோடு யான் ஒரு போதும் சேரமாட்டேன்; 'என்னுடைய பொருள், நீ அளித்த உன்னுடைய பொருளே' என்று கருதி வழிபடுபவர்களாய் உள்ள உண்மை அடியவர்கள் யாவரோ, அந்தப் பெருமை மிக்க சிலருடன், யான் என்றும் பிணக்கம் கொள்ளமாட்டேன். இவற்றிற்கெல்லாம் காரணம், என்னிடத்தில் நீ வைத்தருளிய பெருங்கருணையே ஆகும்.

(குறிப்புரை) ஓவியத்து எழுத ஒண்ணாத ஒப்பற்ற பேரழகுடைமை பற்றி, அபிராமியம்மையை 'அணங்கு' என்றார். 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ' எனவரும் திருக்குறளில், 'அணங்கு' என்பதற்கு 'எழுதலாகா உருவமுடைய தெய்வமகள்' எனப் பரிமேலழகர் பொருள் வரைந்திருத்தல் காணலாம். பிறர் சிலர் இழிபயன் கருதி வழிபடும் சிறுதெய்வங்களை, அவைகளின் பன்மையும் புன்மையும் தோன்ற 'அணங்குகள்' எனக் குறிப்பிட்டார். அவற்றை வழிபடும் பிறர் சிலர்தம் கருத்தாற் சிறுதெய்வங்களை, அணங்குகள்' என்றார் எனினும் ஆம் 'கோலங் கொள்சுவர்க்கம் கோலம் இல் நரகம்' (5-6-10) என நம்மாழ்வார் பாடியது, 'உலகத்தார் கருத்தாலே' எனவரும் விளக்கவுரை இங்கு அறிந்து இன்புறற்பாலது. பரிவாரங்கள் - தலைமையாயினார் ஒருவரைச்

---

* 'அபிராமி அந்தாதி' நூறு பாடல்களுக்கும் 'திருக்கோயில்' இதழில் உரை எழுதி வெளிவந்து முற்றுப் பெற்றதாயினும், இடையில் எங்ஙனமோ தவறி விடுபட்டுப்போன பாடல்கள் ஐந்திற்கும் உரிய உரைவிளக்கம், இப்போது இங்கு வெளியிடப் படுகின்றது.

—ஆசிரியர்.

தொடர்ந்து வரும் குற்றேவலர் திரள்கள். ''கிரிவாய் விடுவிக் ரமவேல் இறையோன் **பரிவாரம்** எனும் பதம் மேவலையே'' என்பது கந்தர் அநுபூதி.

தலைமையுடையார் இருப்ப, அவரை விடுத்து அடிமைகளாவாரைப் பணிதலும் துதித்தலும் இழுக்காதலின், ''வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன்'' என்றார். 'ஒருவரையும்' என உம்மை வருவித்துக் கொள்க. இறையுணர்வு இல்லாதவரின் நெஞ்சகத்தில் இருள் நிறைந்து, வஞ்சகம் முதலிய தீமைகளே மிகுந்திருக்குமாதலின், இறையுணர்வும் பக்தியும் அற்ற தீயவர்களை **'நெஞ்சில் வஞ்சகர்'** என்றார். நெஞ்சில் - நெஞ்சத்தின் இடத்தில், நெஞ்சம் (இதயம்) இல்லாத, என இருவகையாகவும் பொருள்படும். தீயவர்களைக் காண்டல் முதலியனவும் தீங்கு பயக்கு மாதலின் **'இணங்கேன்'** என்றார்.

இறையுணர்வும் பக்தியும் உடைய நல்லோர்களை 'எனது உனது என்றிருப்போர்' என்றார். அஃதாவது 'யான் பெற்றிருக்கும் உடைமையனைத்தும், நீ அளித்தநின்னுடைய உடைமைகளேயாகும் என்று தெளிந்து, இறையருளையே தியானித்து ஒழுகும் பெரியோர்' என்பது கருத்து. இத்தகைய உணர்வும் நல்லியல்பும் உடையோர் உலகத்தில் மிகமிக அரியராதலின், அவர்களைச் **'சிலர்'** என்றார். சிலராக உள்ள அத்தகு பெரியவர்களை யாவர் என்று அறிந்து, அவர்களின் உள்ளம் உவக்கும்படி ஒழுகுதல் பெருநலம் பயக்குமாதலின் "சிலர் யாவரொடும் **பிணங்கேன்**'' என்றார். உபசாரம் செய்தலினும் அபசாரப் படாதிருத்தல் இன்றியமையாததாகலின், பிணங்காமையை விதந்து குறிப்பிட்டார். 'யாவராயினும்' எனப் பொருள் கொள்ளினுமாம்.

தமது பணிவும் அடக்கமும் தோன்ற 'அறிவொன்றிலேன்' என்றார். 'அறிவு ஒன்றும் இலேன்' என்பது கருத்து. 'அறியாமை அகந்தை காம வெகுளி மயக்கங்கள் முதலிய பலவும் உடையேன், ஆனால் அறிவு ஒன்றுமட்டும் தான் இல்லேன்' எனக் கொள்ளினும் அமையும். 'நெறியறியேன், நின்னையே அறியேன், நின்னையேயறியும் அறிவறியேன்' என்றாற் போன்று, பலதிற அறிவுவகைகளுள் ஒன்றேனும் இல்லாதவன் எனினுமாம். காணாதன எல்லாம் காட்டிக், கேளாதன எல்லாம் கேட்பித்துக், திறம் தெருட்டித் தம்மை ஆட்கொண்டருளிய அபிராமி யம்மையின் பெருங்கருணைப் பெற்றியினை, ''என் கண் நீ வைத்த **பேரளியே**'' என வியந்து புகழ்ந்தார். அம்பிகையின் அருளுடையவர்க்கே இப்பேறுகள் வாய்க்கும் என்பது கருத்து. (81)

''அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகில அண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்,
களியாகி, அந்தக் கரணங்கள் விம்மிக், கரைபுரண்டு
வெளியாய் விடின், எங்ஙனே மறப்பேன், நின் விரகினையே?''

(பொழிப்புரை) வண்டுகள் நிறைந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் அபிராமி அம்மையாகிய அருமைமிக்க தெய்வமே! அண்டங்கள் அனைத்திற்கும் ஒளிமயமாக நிலைபெற்ற, ஒளிவீசுகின்ற நின்னுடைய சிறந்த திருவுருவத்தை, யான் நினைந்து தியானிக்குந்தோறும் களிப்பு மேலிட்டு, அந்தக் கரணங்கள் விம்மிதம் அடைந்து, இன்ப வெள்ளம் கரைபுரண்டு, எல்லையற்ற பெருங்கடலாய்ப் பெருகிவிடும் என்றால், நீ எனக்குத் திறம்படச் செய்தருளிய திருவருளின் திறனை, யான் எவ்வாறு மறப்பேன்?

(குறிப்புரை) முன்னைய பாடலில், பிறர் சிலர் வணங்கும் சிறுதெய்வங்களோடு ஒப்ப அம்பிகையையும் 'அணங்கு' என ஓராற்றாற் குறித்தனராதலின், அதனை விலக்கி, இப்பாடலில் **'ஆரணங்கே'** என வியந்து புகழ்ந்தார்.

'அருமை + அணங்கு' என்பது, ஆரணங்கு என வந்தது. அம்பிகைக்குப் 'பத்மாசனி' என் ஒரு பெயர் வழங்குதலின், அதனையுட் கொண்டு 'அளியார் கமலத்தில் ஆரணங்கே' எனச் சிறப்பித்துப் போற்றினர். 'இரக்கம் மிக்கவர்களின் உள்ளம் ஆகிய தாமரை மலரில் வீற்றிருப்பவள்' எனக் கொள்ளினும் பொருந்தும். அளி-வண்டு. இரக்கமும் ஆம். அம்பிகையின் அருளொளியே எல்லா அண்டங்களிலும் பரவி நின்று, அவற்றை இயக்கிக் காத்து வருதலின், 'அகிலாண்டமும் நின் ஒளியாக நின்ற' என்றார்.

அழிந்துபடும் இயல்புடைய ஞாயிறு திங்கள் தீ விண்மீன் போன்ற ஒளிப் பொருள்கள் போலாமல்*, அவற்றிற் கெல்லாம் ஒளி நல்கி எஞ்ஞான்றும் நிலைபெற்றுச் சுடரொளி வீசித் திகழும் சிறப்புடையதாதலின் அம்பிகையின் திருவுருவினை 'ஒளிர் திருமேனி' என்றார். அம்பிகையின் திருவுருவினை உள்ளத் திரையில் எழுதி, ஒருநெறிய மனம் கொண்டு தியானிப்பவர்களுக்கு எல்லையில்லா இன்பம் பெருகுதலின் ''உள்ளுதொறும் களியாகி, அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு, வெளியாய் விடும்'' என்றார். அப்பேரின்ப உணர்வு என்றும் தம் உணர்வில் நிலைபெற்று விளங்குதலின், அதற்குக் காரணமாக அமைந்து பெருங்கருணை புரிந்த நின்னை, ஒரு போதும் மறவேன் என்பார் ''எங்ஙனே மறப்பேன்?'' என்றார், மறக்க முயன்றாலும் முடியாது என்பது கருத்து. ஒன்றுக்கும் பற்றாத தம்மையும் உய்யக் கொண்ட அம்மையின் செயல் வியக்கத் தகுவது ஆதலின், அதனை 'விரகு' என்றார். செய்வகையறிந்து செய்யும் சிறந்த திறன் 'விரகு' எனப்படும். அஃதாவது இங்கு 'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம்'. அம்பிகையைத் தியானிப்பதனால் உண்டாகும் அளவிலா ஆனந்தத்தின் இயல்பு. இப்பாடலில் விதந்தோதப் பெற்றது. (82)

''விரவும் புதுமலர் இட்டு நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிரா வதமும், பகீரதியும்
உரவும், குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.''

(பொழிப்புரை) அபிராமி அம்மையே! நல்ல மனமும் நிறமும் விரவுகின்ற பலவகையான புதிய சிறந்த மலர்களைத் தூவி, நின்னுடைய திருவடியாகிய மணங்கமழ்கின்ற தாமரை மலரை, இரவிலும் பகலிலும் இடைவிடாமல் பணிந்து வழிபடவல்லவர்கள், எத்தகைய தேவர்களும் புகழ்ந்து வணங்குகின்ற உயரிய இந்திர பதவியையும், அயிராவதம் என்னும் வெள்ளை யானையையும், தேவ கங்கையையும், இணையற்ற வல்லமையையும், ஆற்றல் மிக்க வச்சிராயுதம் என்னும் படைக்கலனையும், கற்பக மரச் சோலையையும் உடையவர் ஆவர்.

(குறிப்புரை) அம்பிகையின் திருவடிகளைப் 'பாத விரைக் கமலம்' என்று புகழ்ந்தார். அத்திருவடிகளைப் பலவகைப்பட்ட, அழகிய. அன்று பூத்த நறுமலர்கள் கொண்டு தூவி வழிபடவேண்டும் என்பார் 'விரவும் புதுமலர் இட்டு' என்றும்; இடைவிடாது வழிபடுதல்

---

* ''Neither the sun nor any other star can continue radiating away its mass at such a rate for ever. The sun loses 250 million tons of mass every minute, and there is no known source of replenishment which can supply new mass to it at even a small fraction of this rate. The sun possesses enough mass to continue to radiate at its present rate for 15 million million years. Actually the sun can look forward to a longer life than this, for as a star ages, the rate at which it radiates away energy and so the rate at which it spends its mass continually diminishes.''

— Sir James Jeans
Astronomy and Cosmogony. p. 411

வேண்டும் என்பார். 'இரவும் பகலும் இறைஞ்ச' என்றும் குறிப்பிட்டார். இங்ஙனம் வழிபாடு புரிதலின் அருமையை 'வல்லார்' என்பதனுற் புலப்படுத்தினுர். அம்பிகையை வழிபட்டால் இந்திர பதவியையும்கூட எளிதிற் பெறலாம் என்பதனை வலியுறுத்த, அவனுக்குரிய சிறப்புப் பொருள்களையெல்லாம் விதந்தெடுத்து ஓதிக் காட்டினுர். இவற்ருல் அன்றி இந்திரனுக்கு என்று ஒரு தனிச் சிறப்பும் இல்லை என்பது கருத்து. இமையோர் — தேவர்கள்; பதம் — பதவி; அயிராவதம் — வெள்ளை யானை. இந்திரனுக்குரிய உச்சைச்சிரவம் என்னும் வெள்ளைக் குதிரை முதலிய பிறபொருள்களும் இங்குக் கொள்ளப்படும். பகீரதி — இங்குத் தேவகங்கையைக் குறித்தது. பகீரதன் என்பவனுல் தவஞ்செய்து நிலவுலகிற்குக் கொணரப் பெற்றதாதலின், கங்கை நதிக்குப் பகீரதி என்னும் காரணப்பெயர் அமைந்தது. குலிசம்-- வச்சிராயுதம், இந்திரனுக்குரிய படைக்கலம்.

''தூ மலர்க்கொன்றைத் தொங்கலான் அடியவர்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே'' என்பது திருஞான சம்பந்தர் தேவாரம், ஆதலின் அடியவர்களும் இவற்றை ஒரு பொருளாகப் பெறுவதற்கு விழைந்து வேண்டிக் கொள்வார் அல்லர்; அம்பிகையும் தன் கருணையினுல் உயர்வற உயர்ந்த பெருநலன்களை வழங்குவதன்றி இவற்றை ஒரு பொருட்டாக நினைத்துத் தனது அடியவர்களுக்கு அளிக்க முற்படுவாள் அல்லள்; இவைகள் தாமாகவே அடியவர்கள் பால் வலிதின் வந்து அடைந்து, அவர்தம் உடைமைகளாக அமைந்து பணி புரிந்து நிற்கும் என்பதை உணர்த்தப் 'பெறுவர்' என்ருே, 'அளிப்பள்' என்ருே குறிப்பிடாமல், 'இறைஞ்ச வல்லார் உடையவரே' என்றதன் நுட்பம் அறிந்து இன்புறற்பாலது.

(83)

''உடையாளை, ஒல்கு செம்பட்டுடை
யாளை, ஒளிர்மதிச் செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சு அடை
யாளைத். தயங்கும் நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மானிடை
யாளை, இங்கு என்னைஇனிப்
படையாளை, உங்களையும் படையா
வண்ணம் பார்த்திருமே.''

(பொழிப்புரை) என்னை அடிமையாக உடையவளும், அசைந்து நுடங்குகின்ற சிறந்த செம்பட்டினை உடையாகக் கொண்டவளும், ஒளி பரப்புகின்ற பிறை மதியைத் தனது சிவந்த சடையின்கண் அணிந்தவளும், அன்பற்ற வஞ்சகரின் நெஞ்சத்தில் சென்று சேராதவளும், அழகுமிக்கு விளங்குகின்ற நுண்ணிய நூல், போன்ற மெல்லிய இடையை உடையவளும், எங்களது தலைவராகிய சிவபெருமானின் இடப்பாகத்தில் இருப்பவளும், இவ்வுலகில் இனிமேல் என்னைப் பிறக்குமாறு படைக்காதவளும் ஆகிய அபிராமி அம்மை, உங்களையும் கூட இவ்வுலகில் பிறக்குமாறு படைக்காதபடி, நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்.

(குறிப்புரை) 'எல்லாம் உன் உடைமையே எல்லாம் உன் அடிமையே' என்றபடி, எல்லோரையும் எல்லாவற்றையும் தனக்கு உரிமையாக உடையவள் ஆதலின், அம்பிகையை 'உடையாள்' என்ருர். இறைவனை உடையான் என்றும், இறைவியை உடையாள் என்றும் சான்ருேர்கள் வழங்குவர். இறைவன் புலித்தோலைத் தனது அரைக்கு அசைப்பவன்: ஆயினும், இறைவி உயரிய பட்டும் துகிலுமே அணிபவள் ஆதலின் 'ஒல்கு செம்பட்டு உடையாள்' என்ருர். இங்கு 'உடையாள்' என்பது உடையை அணிந்தவள் என்னும் பொருளில் வந்தது. கணவன் தன் மனைவியை வாழ்வித்துப் பேணுதற்குரிய வகையை உலகமக்களுக்குச் சுட்டியவாறு, இறைவனுக்குரிய சடைமுடியும் பிறைமதியும் போன்ற அடையாளங்கள் சில, இறைவிக்கும் உரியதாதல் பற்றி 'ஒளிர்மதிச் செஞ்சடையாள்' என்ருர். அம்பிகை கரவாடும் வஞ்சக நெஞ்சர்க்கு அரிய காட்சியளாதலின், 'வஞ்சகர் நெஞ்சு அடையாள்' எனக் குறித்தார். அம்பிகையின் திருவுருவ அமைப்பின் அழகினைத் 'தயங்கும் நுண்ணூல் இடையாள்' என்னும் தொடராற் புலப்படுத்தினுர். மனைவிக்குப் பெருமை பயப்பது கணவனின் உள்ளத்தில் இடம்கொண்டு வீற்றிருக்கப்பெறுதலேயாதலின், ''எங்கள் பெம்மான் இடையாள்'' என்ருர். 'இடை' என்பது ஈண்டு இடம் (நடு) என்னும் பொருளாய், உள்ளத்தை உணர்த்தி நின்றது. 'உடையாள் உன்றன் நடுவிருக்கும்' என்னும் திருவாசகமும், ''நீயாகியர் என்

கணவனே, யானுகியர் நின் நெஞ்சு நேர்பவளே" என்னும் குறுந்தொகைப் பாடலும் (49), இங்கு நினைக்கத் தகுவன.

சிவபெருமானை 'எங்கள் பெம்மான்' (பெருமான்) எனக் குறிப்பிட்டது, இவர் தம் சிவபக்தியின் சிறப்பை இனிதுணர்த்தும். அம்பிகையை வழிபட்டுத் தாம் பெற்ற பெறலரும் பேறு இது என்பார், ''இங்கு என்னை இனிப் படையாள்'' என்றார். 'இங்குப் படையாள்' எனவே, அங்கு 'வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து' என வைத்தருள்வாள் என்பது உணர்த்தப்பெற்றது. யான் பெற்ற இப்பேற்றை அனைவரும் பெறுதல் வேண்டும் என்னும் பெருவிருப்பத்தினால், உலகமக்களை நோக்கி ''உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே'' எனப் பரிவுகூர்ந்து உபதேசித்தருளினார். 'உலக உபகாரம் ஞானிகள் விவகாரம்' என்பது பழமொழி, இப்பாடலில் அமைந்துள்ள யமகம் அல்லது மடக்கு என்னும் சொல்லணியின் நயம் சுவைத்து மகிழத்தக்கது. 84

''பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும்,
பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும்,
என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும்,
சிற்றிடையும்,
வார்க் குங்கும முலையும், முலைமேல்
முத்து மாலையுமே.''

(பொழிப்புரை) என்னுடைய துன்பங்கள் அனைத்தையும் தீர்க்கின்ற திரிபுரசுந்தரி ஆகியஅபிராமி அம்மையின் ஒளிமிக்க திருமேனியும், நுண்ணிய சிறிய இடையும், கச்சணிந்து குங்குமம் பூசப்பெற்ற மார்பகமும், அம்மார்பகத்தின்மேல் உள்ள முத்துமாலையும், கைகளில் ஏந்தியுள்ள பாசம் அங்குசம் ஆகியவையும், குளிர்ந்த சிறகுகளை உடைய வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற புதிய மலராகிய அம்புகள் ஐந்தும், கரும்பாகிய வில்லுமே, யான் பார்க்கின்ற திசைகள் தோறும் தெரிகின்றன.

(குறிப்புரை) இறையருள் பெற்றவர்கள், எல்லாப் பொருள்களையும் இறைவடிவமும் வண்ணமுமாகவே காணப்பெறுவார்கள். இதனைப் ''பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பார் பதார்த்தங்கள் பாரார்'' எனவரும் சிவஞானசித்தியார் செய்யுளால் தெளியலாம். இந்நிலையை 'உருவெளிப்பாடு' என அகப்பொருள் நூல்கள் கூறும். எங்கெங்கே நோக்கினும் அங்கங்கே, தமது கருத்தைக் கவர்ந்தோரின உருவத்தினைக் காண்பது காதலர் இயல்பு. அம்முறையில், அருட்பேறு தலைப்பட்ட அடியவர்களும், தம்மை ஆட்கொண்டு அருள்புரிந்த தெய்வத்தின் திருவுருவத்தையே எல்லா இடங்களிலும், எல்லாப் பொருள்களிலும் கண்டு மகிழ்ந்து களித்து நிற்பர். அவ்வருளனுபவ நிலையின் இயல்பினை, அபிராமி பட்டரின் இவ்வழகிய பாடல் செவ்விதின் உணர்த்துகின்றது. அபிராமியம்மையின் அருள்பெற்று, அதிலேயே தோய்ந்து திளைத்து நின்ற அபிராமி பட்டரின் சிறந்த சீவன்முத்தித் தன்மையினை அறிவதற்கு, இப்பாடல் இனியதொரு சான்றாகும். அம்பிகை தன் திருக்கைகள் நான்கனுள், இரண்டில் முறையே பாசமும் அங்குசமும் தாங்கியிருக்கின்றாள்; மற்றைய இரண்டு திருக்கைகளில் கரும்பு வில்லும், மலர் அம்புகளும் ஏந்தியிருக்கின்றாள். இவற்றுள் முன்னையவை அருளியற் பேற்றையும், பின்னையவை உலகியற் பேற்றையும் உயிர்களுக்கு வழங்குவனவாகும். இங்ஙனம் அம்பிகை இரு திறத்தாலும் அருள் புரிவது, நம்முடைய துன்பங்களைத் தீர்த்தற் பொருட்டேயாகலின், ''என் அல்லல் எல்லாம் தீர்க்கும் திரிபுரையாள்'' என்றார். திரிபுரையாள்-திரிபுர சுந்தரி; திரிபுரைச் சக்கரத்திற்கு உரியவள். இப்பாடலினால், அம்மையின் திருக்கோலத் தரிசனத்தின் இயல்பு புலப்படுத்தப் பெற்றது. 85

— ஆசிரியர்.

இலட்ச தீப விழா

முன்னுரை

இறைவன், சோதிவடிவமாகவும், ஒளி மயமாகவும் திகழ்பவன். 'சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே' என மணி வாசகரும்: ''தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே திருவையாறு அகலாத செம்பொற்சோதீ'' எனத் திருநாவுக்கரசரும்; ''ஒளி வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே'' எனத் திருமாளிகைத் தேவரும்; ''அலகில் சோதியன்'' எனச் சேக்கிழாரும், ''அருட் பெருட்சோதி தனிப்பெருங் கருணை'' என இராமலிங்க அடிகளாரும் அருளிச் செய் திருத்தல் காணலாம்.

இறைவன் சோதிவடிவமாகவும், ஒளிமயமாகவும் திகழ்தலை நினைந்து உணர்ந்து வழிபடுவதற்கு ஓர் அடையாளமாகவே, திருக்கோயில்களில் திருவிளக்குகள் அமைத்து வணங்குகின்றோம். நமது பண்டைத் தமிழ் வேந்தர்களின் கல்வெட்டுக்கள் பெரும்பாலானவற்றில், அவர்கள் திருக்கோயில்களில் இடைவிடாது எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கின்ற ''நந்தா விளக்குகள்'' அமைத்தற்கு வழங்கிய நிபந்தங்களைப் பற்றிய செய்திகளே, மிகுதியாக இடம் பெற்றிருக்கக் காண்கின்றோம்.

விளக்கிட்டார் பேறு :

திருக்கோயில்களில், இறைவன் திருமுன்னிலையில் திருவிளக்கு இடுவதன் சிறந்த பயனைத் திருநாவுக்கரசர், பின் வருமாறு விளக்கிப் பாடுகின்றார்.

''விளக்கினார் பெற்ற பேறு
 மெழுக்கினாற் பதிற்றி யாகும்;
துளக்கில்நன் மலர் தொடுத்தால்
 தூயவிண் ஏறல் ஆகும்;
விளக்கிட்டார் பேறு சொல்லின்
 மெய்ந்நெறி ஞானம் ஆகும்;
அளப்பில கீதம் சொன்னார்க்கு
 அடிகள்தாம் அருளு மாறே''

இத்தேவாரத் திருப்பாடலால், திருக்கோயிலில் திருவிளக்கு இடுபவர்கள், வீடுபேற்றுக்குரிய மெய்ந்நெறியாகிய ஞான நலத்தினைப் பெறுவார்கள் என்பதனை, நாம் நன்கினிது உணரலாம்

தீபம் ஏற்றலின் சிறப்பு:

முன்னைப் பிறவியில் ஓர் எலியாக இருந்து, திருமறைக்காடு என்னும் வேதாரணியம்

கோயிலில் திருவிளக்கில் இருந்த நெய்யை உண்ணச் சென்று, தன்னை அறியாமலே, அத் திருவிளக்கில் இருந்த திரியினைத் தூண்டிவிட்டு, மங்கிமறையும் நிலையில் இருந்த திரி, நன்றாகச் சுடர்விட்டு ஒளிபரப்பி எரியும்படி செய்ததன் பயனாகவே, மறுபிறப்பில் அவ்வெலி மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து, மூன்று உலகங்களையும் ஆளும் பெரும்பேறு பெற்றது.

நிறைமறைக் காடு தன்னில்,
நீண்டெரி தீபம் தன்னைக்
கறைநிறத்து எலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட,
அறைகடல் மண்ணும் விண்ணும்
அகன்றவான் உலகும் எல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே''

என்னும் தேவாரப் பாடலால், மகாபலிச் சக்கரவர்த்தியின் வரலாறு பற்றியும், கோயில்களில் விளக்குகள் ஏற்றுவது எவ்வளவு சிறந்த பெரும் புண்ணியம் ஆகும் என்பதனைப் பற்றியும், யாவரும் அறிந்து தெளியலாம்.

''பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தற்குப் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு
ஆர்வத்தை உள்ளே வைத்து,
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர் வீரட்ட னாரே

உடம்பெனும் மனைய கத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் அட்டி
உயிர்எனும் திரி மயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே

—நாவுக்கரசர்

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே

விளக்கைப் பிளந்து விளக்கினை ஏற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலும் ஆமே

—திருமூலர்

எனவரும் பற்பல திருப்பாடல்களினால், திருக்கோயில்களில் விளக்கை ஏற்றுவதன் பயனும், சிறப்பும், தத்துவமும் விளக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

முடிவுரை

கடவுள் ஒளிவடிவம் உடையவர்; சோதி சொரூபம் கொண்டு விளங்குபவர். "சோதியே! சுடரே சூழொளி விளக்கே!" என்பது திருவாசகம். இத் தத்துவத்தை உணர்த்தும் முறையிலேயே, கோயிலில் ''இலட்ச தீப விழாக்கள்'' அவ்வப்போது கொண்டாடப் பெறுகின்றன.

விளக்கிடுவதனால் இருள் அகன்று ஒளி பரவுதல்போல, இலட்ச தீப விழாவினால், உலக மக்களின் துன்பங்கள் நீங்கி, மக்கள் அனைவரும் இன்பம் பெருக வாழ்வதற்கு, இறைவனின் திருவடிகளைப் போற்றித் துதிப்போமாக!

— ஆசிரியர்.

சித்திரை வசந்த விழா

முன்னுரை

பண்டைத் தமிழ் மக்கள் அறிவிலும், பண்பிலும், நாகரிகத்திலும், அருள் ஒழுக்கத்திலும், மிகவும் தலைசிறந்து விளங்கியவர்கள். இறைவனை இயற்கையின் வாயிலாகக் கண்டுணர்ந்து போற்றியவர்கள். இயற்கையோடு இயைந்த இனிய நல் வாழ்க்கை வாழ்ந்தவர்கள். ஆதலின் அவர்கள் தமது வாழ்க்கையினை, இன்பம் நிறைந்த, இறையுணர்வோடு கூடிய, கலையுணர்ச்சி சான்ற நெறிகளில், தம்முடைய நாகரிகமும் பண்பாட்டு நலன்களும் புலப்படும்படி, அரிதின் ஆராய்ந்து அழகுற வகுத்து அமைத்துக் கொண்டனர். அவர்களின் வாழ்க்கையில், ஆண்டின் ஒவ்வொரு மாதமும், அரிய இனிய விழாச்சிறப்பு மிக்கு விளங்கியது. அதனால் அவர்களின் வாழ்க்கை 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்னும்படி சிறப்புற்று விளங்கியது.

வசந்த காலம்

அங்ஙனம் பண்டைத் தமிழ்மக்கள், ஒவ்வொரு மாதத்திலும் கொண்டாடி வந்த விழாக்கள் பலவற்றுள், 'சித்திரை வசந்தவிழா' என்பது, முதன்மையும் மேன்மையும் வாய்ந்தது. வசந்தம் என்பது, தென்றற் காற்று வீசுகின்ற, இனிய நல்ல இளவேனிற் காலமாகும். அக்காலத்தில் செடி கொடி மரங்கள் ஆகிய பலவும், புதியனவாகத் தழைத்துச் செழித்து வளர்ந்தோங்கத் தலைப்படும். மிகு வெப்பமோ, மிகு குளிர்ச்சியோ, மிக்க பெருமழையோ, மிக்க கடும் பனியோ இல்லாமல், உடலுக்கும் உணர்வுக்கும் ஏற்ற, இனிய நல்ல தட்பவெப்ப நிலையுடன் கூடித்திகழ்வது, இளவேனில் என்னும் வசந்த காலமாகும்.

இவ் வசந்தகாலம், தூய காதல் உணர்ச்சிக்கும், நல்ல இன்ப நுகர்ச்சிக்கும் ஏற்ற சிறப்புடையதாகும். வேனிற்காலத்திற்குரிய அதிதெய்வம் மன்மதன் ஆவான். இதனால் அவனுக்கு 'வேனிலான்' என்று ஒரு பெயர் உண்டு. வேனிற்காலம், போக நுகர்ச்சிக்கு இசைந்த தொன்றாதலின், இந்திரனும் இவ் வேனிற் காலத்திற்குரிய தலைவனாகக் கூறப்படுவான். இதுபற்றியே, பண்டைத் தமிழ் நாட்டில் பூம்புகார் நகரத்தில், சித்திரை மாதத்துச் சித்திரைத் திருநாளில், (அதாவது சித்திரா பௌர்ணமி எனப்படும் முழு நிலா நாளில்), இந்திரவிழா மிகப் பெருஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

இந்திர விழா

சித்திரைத் திங்களில், சித்திரையும் நிறை மதியும் கூடிய சிறப்புமிக்க நாளில், மங்கல மகளிர் பொங்கல் வைத்துப் பூச்சொரிந்து

குரவையாடி மகிழ்வர். போர்வீரர்கள் ''வேந்தன் கொற்றம் கொள்க'' என்று இறை வழிபாடு புரிவர். முரசறைதலும் கொடி யேற்றலும் ஆகிய புனிதச் சடங்குகள் அந் நாளில் முறையே நிகழும். நகர வீதிகள் எல்லாம், பூரணகும்பம் பொற்பாலிகை பாவை விளக்கு முதலியவற்றால், அணி செய்யப்படும். ஐம்பெருங்குழுவினரும், எண்பேராயத்தினரும், அரச குமரரும், பரத குமரரும், களிறு தேர் புரவிகளை ஊர்ந்து திரண்டு வந்து அரசனை வாழ்த்திச் செல்வர். காவிரியாற்றின் புனித நீரைப் பொற்குடங்களில் கொணர்ந்து இந்திரனை நீராட்டுவர். பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபிரான் கோயிலிலும், அறுமுகச் செவ்வேளாகிய முருகனின் கோயி லிலும், வால்வளை மேனி வாலியோன் ஆகிய பலதேவனின் கோயிலிலும், நீலமேனி நெடி யோன் ஆகிய திருமாலின் கோயிலிலும், பிறவற்றிலும், நான்மறை மரபிற்கேற்ப ஓமங்கள் நடைபெறும். சமண பௌத்தர்களின் பள்ளிகளிலும், மற்றும் பலப்பல அறச்சாலை களிலும், ஆங்காங்கே அறநெறிச் சொற் பொழிவுகள் நிகழ்த்தப்பெறும்: மக்கள் அனை வரும் அன்பினால் ஒன்றுபட்டுக் கலந்து அளவளாவி இன்புற்றுமகிழ்வர்.

இங்ஙனம் பூம்புகாரில், சித்திரைமாதத்தில், இந்திரவிழாக் கொண்டாடப்பெற்று வந்த செய்திகளைச் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய காப்பியங்களினால் அறிகின்றோம். இம் மாதத்தில் சிலவிடங்களில் இன்றும் ''காம தேவன்பண்டிகை'' களிப்புறக் கொண்டாடப் பெற்று வருதல் காணலாம்.

திருவாரூரில் வசந்தவிழா :

இவ்வாறு, ஒரு காலத்தில் இந்திரன் பொருட்டும், காமதேவன் பொருட்டும் கொண் டாடப்பட்டு வந்த வசந்தவிழா என்னும் வே னிற்கால விழா, காலப்போக்கில் அந்தத்தேவர் களின் முதன்மையும் சிறப்பும் குன்றிய நிலை யில், சிவாலயங்களிலெல்லாம் கொண்டாடப் படும் சிறப்பு விழாக்களுள் ஒன்றாக நிலைபெறுவ தாயிற்று. இற்றைக்கு ஏறத்தாழ 1000 ஆண்டு களுக்கு முன்னரே, சிவாலயங்களில் சித்திரை வசந்தவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது.

திருவொற்றியூரில் சங்கிலிநாச்சியாரை மணந்துகொண்டு, அங்குச் சிலகாலம் தங்கி மகிழ்ந்திருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், திரு வாரூரில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் நிகழும் வசந்தவிழாவின் மாட்சிமையினையும், அவ்வசந்த விழாவின்கண் திருவாரூர் வீதி விடங்கப்பெருமானின் திருவோலக்கத்திற் பரவை நாச்சியார் ஆடலும் பாடலும் அழகுற நிகழ்த்தும் திறனையும் நினைவு கூர்ந்து, நீங்காத காதலினால் திருவொற்றியூரினின்று நீங்கித் திருவாரூர் செல்ல நினைந்தருளினார். இச்செய்தி,

பொங்கு தமிழ்ப் பொதியமலைப்
பிறந்துபூஞ் சந்தனத்தின்
கொங்களைந்து குளிர்சாரல்
இடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூர்
அணிவீதி அழகர் அவர்
மங்கலநாள் வசந்தம் எதிர்
கொண்டருளும் வகைநினைந்தார்.
— ஏயர்கோன், 270

எனவரும் பெரியபுராணச் செய்யுளினால் இனி தறியப்படும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், தாம் சங்கிலி நாச்சியாருக்குச் செய்து தந்த சூளுறவு ஆகிய சபதத்தையும் மறந்து, திருவொற்றியூரினின்று நீங்கித் திருவாரூர்க்குச் செல்ல நினைத்ததற்குக் காரணமாய் அமைந்தது, அங்கு ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் நிகழும் வசந்தவிழாவே எனின், அதன் அருமை பெருமைகளை என்னென்பது!

சித்திரை வசந்தவிழா, திருவாரூரில் மட்டு மேயன்றி, நம் தமிழ்நாட்டில் எல்லாச் சிவால யங்களிலுமே சிறப்புறக் கொண்டாடப்பெற்று வந்தது. சிறப்பாக, நமது திருமயிலாப்பூரில்

இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னர்த் தொட்டுக் கொண்டாடப்பெற்று வந்தது என்னும் செய்தி,

நற்றுமரை மலர்மேல்
நான்முகனும் நாரணனும்
உற்றுங்கு உணர்கிலா
மூர்த்தி திருவடியைக்
கற்றூர்கள் ஏத்தும்
கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்றுப்புக் காணுதே
போதியோ பூம்பாவாய் ''

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தால், தெளியப்பெறுகின்றது.

திருப் பொன்னூசல் :

வசந்தவிழாவில், இறைவன் ஊசலில் எழுந்தருளி, ஊசலாடப்பெறுவன். மணிவாசகனூர் தமது திருவாசகத்தில் ''திருப்பொன் ஊசல்'' (ஊஞ்சல்) என்றெரு திருப்பதிகம் பாடியிருத்தல் காணலாம். பிறந்து இறந்தும், இறந்து பிறந்தும், இங்ஙனம் போவதும் வருவதும் ஆகி அலேந்துழலும் ஆருயிர்களின் தன்மை, ஓர் ஊசலின் நிலேயைப் போல இருத்தலின், ஆருயிர்கள் அந்நிலேமை மாறி அமைதி இன்ப நலம் அடைதல் குறித்தே, இறைவனுக்கு 'ஊஞ்சல் விழா' நிகழ்த்தப்பெறுகின்றது. ''வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்'' என்றுற்போல, உயிர்களின் ஊசலாட்டுப் போன்ற பிறப்பிறப்புத் துன்பத்தினை நீக்கியருளுதல் வேண்டும் என்னும் குறிப்பிலேயே இறைவனுக்கு '' ஊசற் சிறப்பு'' (பொற்றுப்பு—பொன்தாம்பு— பொன்னூசல்) வசந்த விழாவில் நிகழ்த்தப்பெறுகின்றது. இவ்வுண்மையினை,

''உறுகயிறு ஊசல் போல,
ஒன்றுவிட்டு ஒன்று பற்றி,
மறுகயிறு ஊசல் போல
வந்துவந்து உலவும் நெஞ்சம்,
பெறுகயிறு ஊசல் போலப்
பிறைபுல்கு சடையாய் :
அறுகயிறு ஊசல் ஆனேன்
அதிகை வீரட்ட னீரே'

எனத் திருநாவுக்கரசர் அருளியுள்ள திருநேரிசைப் பாடலாலும், நாம் தெளிதல் கூடும்.

முடிவுரை :

இதுகாறும் கூறியவற்றுல், வசந்தவிழாவின் பழமையும் பெருமையும் தத்துவமும் இனைய என்பதனை யாவரும் அறியலாம். இறைவனுக்கு வசந்தவிழாச் செய்வதனுலும், அதனைத் தரிசிப்பதனுலும், நம்முடைய வாழ்விலும் வசந்தம் ஏற்படும்; தென்றல் வீசும்: இன்பமும் அமைதியும் எய்தும் என்பது திண்ணம்.

— ஆசிரியர்.

வைகாசி விசாகம்

முன்னுரை:

வைகாசி என்னும் மாதத்தின் பெயர் விசாகம் என்னும் பெயரின் அடிப்படையினின்று பிறந்தாகும். விசாகம் என்னும் நட்சத்திரத்தைத் தனக்குரிய சிறப்பு நாளாகக் கொண்டமாதம், வைசாகி மாதமாகும். வைசாகி என்னும் சொல்லே, எழுத்து நிலை மாற்றம் (Metathesis) பெற்று, வைகாசி என வழங்குவதாயிற்று. விசாகம் ஞானத்திற்குரிய சிறப்புடைய நல்ல நட்சத்திரம். மந்திரோபதேசத்திற்கும் அதுமிக்க மாட்சிமை உடையது. மிகச் சிறந்த தவ ஞானிகளாக உலகம் புகழ்ந்து ஏத்தும் புத்தர்பெருமான், நம்மாழ்வார் ஆகியோர் விசாகத்திருநாளில் தோன்றியருளியவரே யாவர். விசாக நட்சத்திரத்தில் வரும் பௌர்ணமியாகிய புண்ணிய நாளிலேயே, புத்தர்பெருமான் வீடுபேறு அடைந்தார் என்பர் ஆதலின் **'வைசாக பூர்ணிமை'** என்பது, மிகச் சிறந்த ஒரு புண்ணிய நாளாகப் போற்றப்பெற்று வருகின்றது.

விசாகத்தின் மேன்மை

முருகனுக்கு விசாகன் என்பது ஒரு திருப்பெயர். சிவபெருமானுக்குத் திருவாதிரையும், திருமாலுக்குத் திருவோணமும்போல, முருகனுக்கு விசாக நட்சத்திரம் மிகவும் சிறப்பாக உரியதாகும். விசாகம் ஞானத்திற்குரிய மேம்பாடுடைய நல்ல நட்சத்திரமாதலின், விசாகத்திற்குரிய முருகன், ''ஞானபண்டித சாமி'' என விளங்கித் தன்னை வழிபடும் அடியார்களுக்கெல்லாம் ஞானச் செல்வத்தைப் பெரிதும் வாரி வழங்கியருள்கின்றான். விசாகம், ஆறு நட்சத்திரங்கள் ஒருங்கு கூடியதொன்று. எனவே அதற்குரிய அதி தெய்வமாகிய முருகனும், ஆறு திருமுகங்களோடு திகழ்கின்றான் என்பர் பெரியோர். விசாகநாளில் விரதம் இருந்து, நாம் அன்புடன் முருகனை வழிபட்டால், ''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' என்றபடி முருகன் நமக்கும் குருவாக எழுந்தருளி வந்து, ஞானோபதேசமும் மந்திரோபதேசமும் செய்தருள்வான் எனப் பெரியோர்கள் கூறுவர். அது பற்றியே வைகாசி விசாக விழா, சிவாலயங்களிலெல்லாம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகின்றது.

சிவபிரானும் முருகனும்

சிவபிரானும் முருகனும் தம்மில் வேறு அல்லர், இருவரும் ஒருவரே; ஐம்முகச் சிவனே ஆறுமுகச் சிவன்; சங்கரனே சண்முகன் என்பது பெரியோர்கள் கண்டறிந்து கூறும் உண்மை.

''அருவமும் உருவும் ஆகி,
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்,
கருணைகூர் முகங்கள் ஆறும்,
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே,

ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய''

''ஆதலின் நமது சத்தி
அறுமுகன், அவனும் நாமும்
பேதகம் அன்ருல்; நம்போற்
பிரிவிலன் யாண்டும் நின்ருன்;
ஏதமில் குழவி போல்வான்;
யாவையும் உணர்ந்தான்;சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க் கருள வல்லான்''

—கந்தபுராணம்

எனவரும் கந்தபுராணச் செய்யுட்களால், முருகப் பெருமான், சிவபிரானுகிய பிரமப்பொருளினின்று தோன்றி, அதனின் வேறுபாடின்றி விளங்குபவன் என்பதும், சிவபிரானும் முருகனும் ஒருவரேயன்றித் தமக்குள் பேதம் இல்லாதவர் என்பதும் பெறப்படும்.

முடிவுரை :

எனவே வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில், விரதம் இருந்து, சிவபெருமானையும், முருகனையும் அன்புடன் வழிபடுவோர், எல்லா நலன்களும் இன்பங்களும் எய்தி மகிழ்வர்.

''மிகவும் சிறந்த வைகாசி
விசாகம் தன்னில், பக்திமிக்க
தகவின் இறைவன் தாள்பணிவோர்
சகல நலமும் தாம்பெறுவார்''

— ஆசிரியர்

அருணகிரி நாதரின் திருப்புகழ்ப் பாடல் பெற்றதும், சென்னைக்கு அருகில் உள்ளதும் ஆகிய சிறுவரம்பேடு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலின் இராச கோபுரத் திருப்பணியை, இராவ்சாகிப் திரு நல். முருகேச முதலியார், B.A., அவர்கள் தலைமையில், சென்னைத் துணை யாணையர் திரு. கே. இராஜா, B.A., B.L., அவர்கள் துவக்கி வைத்தல்.

திருவரங்கம் கோயில்

(முற்றொடர்ச்சி)

(ந. ரா. முருகவேள், M. A., M.O.L.)

மேற்குறித்த இருபதுக்கு மேற்பட்ட தொகுதியினர் அல்லது பிரிவினர், பலவேறு திறப்பட்ட ஓர் அரிய பெரிய குழுவினராக அமைந்திருந்தனர். இவர்கள் அனைவரையும் ஒருங்கு இசைவித்து இணைத்து, ஒழுங்கு பெறச் செலுத்த வேண்டியிருந்தது. வேறு பிற இடங்களிற் காணப்படுவது போன்று, இவர்களை ஆளும் ஒரு சபையையோ, அல்லது ஒரு குழுவையோ பற்றிய குறிப்பு எதுவும், கோயிலொழுகு நூலின்கண் காணப்படவில்லை. கோயிலின் நிர்வாகமானது, ஒருபெரும் ஆட்சித் தலைவரிடத்தில் இருந்ததைக் குறிப்பிடுவதுடன், இராமாநுஜரின் காலத்திற்குப்பிறகு, அவர்தம் பலவகைப் பணிகள் குறித்த பட்டியல் ஒன்றையும், அந்நூல் தருகின்றது.

ஒவ்வொரு நாளும் வைகறைப் பொழுதில் கோயிலுக்குச் செல்வதும், அங்குத் தம்முடைய மிக நெருங்கிய உதவியாளர்களைச் சந்திப்பதும், ஆட்சித்தலைவரின் கடமையாக இருந்தது. முறையாக வைகறையில் நீராடிய பிறகு, அவர் இரண்டாம் பிராகாரத்திலுள்ள புனிதம்மிக்க கொடிக் கம்பத்தின் அடிக்குச் செல்வார். பிறகு அவர் திருமடைப்பள்ளியையும், சரக்கு அறையையும், பூசைக்கும் பிராமணர்களுக்கும் தேவையான நறுமணப் பொருள்களையும் பார்வையிட்டு, அன்று செய்வதற்குரிய பலவேறு பணிகளையும் ஊழியர்களுக்குப் பகிர்ந்து அளிப்பார். பிறகு அவர் கோயிலின் திருநந்தவனத்திற்குச் சென்று, அன்று நிகழ்வதற்குரிய விழா அல்லது சடங்குகளிற் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்ப, பல்வேறு வகையான பூக்களைத் தேர்ந்தெடுப்பார். அதன்பிறகு பூசை புரிவதற்கு அவர் செல்வார். பிறகு கோயில் ஊழியர்களின் பிரதிநிதிகள் அனைவரும் அடங்கிய கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, அவர்கள் தம்முடைய கடமைகளை ஊக்கமாகவும், உண்மை அன்புடனும் செய்வதற்கு ஏற்ற, அறிவுரைகளையும் யோசனைகளையும் கூறுவார். பின்னர்ப் பூசை புரிவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கவனித்து மேற்பார்வை புரிவார். சுவாமிக்கு நண்பகல் நிவேதனம் செய்து முடிந்த பிறகு, அவர் தம் வீட்டிற்குச் சென்று உணவு கொண்டு சிறிது ஓய்வு எடுப்பார். பிற்பகலில் பல வேறு வகையான சடங்குகளையும் விழாக்களையும் நடத்துவார்.

ஒவ்வொரு சடங்கு அல்லது விழாவையும் ஏற்பாடு செய்தல், அது முறைபடி சிறப்பாக நடத்தப்படுகின்றதா என்று கவனித்து மேற்பார்வையிடுதல் முதலியன, இவருடைய கடமைகளாகும். நம்பிகள், பிராமணர்கள் நீங்கலாக, இத்துறையில் மற்ற எல்லோரையும் கண்காணித்து ஏவல் கொள்ளுவதற்கு, இவருக்கு அதிகார வரம்பும் உரிமையும் உண்டு. கருவூலத்தில் வைக்கப்பெறும் எல்லாப் பொருள்களின் மீதும், இலச்சினை இடுதலும் கூட, இவரது கடமையாகும். கோயிலின் உள்துறை ஊழியத் தலைவர்கள் அனைவரும் நேரடி

---

*திருவரங்கம் கோயிலைப் பற்றிய இக்கட்டுரை, யுனெஸ்கோ நிறுவனத்தின் சார்பில், Miss Jeannine Auboyer என்னும் அம்மையார் அவர்களால் எழுதப் பெற்றுள்ள, ஆங்கில நூலின் தமிழாக்கம் ஆகும்.

— ஆசிரியர்

யாக இவருடைய ஆணைக்குட்பட்டவராவர், இவருக்கு அணுக்க ஊழியம் புரிய, ஏகாங்கி ஒருவர் இருப்பார். இவ்வாட்சித் தலைவருக்கு மிக உயர்ந்த மரியாதைகள் செலுத்தப்படும்.

தலைமை ஆட்சியருக்குத் துணையாக, மற்றும் நான்கு அலுவலர்கள் இருந்தனர். அவர்கள் கோயிலின் ஆட்சிக்கும், அதன் புறம்பேயுள்ள கட்டிடங்களுக்கும், பொறுப்புடையவர்கள் ஆவர். சரக்கறையின் தலைவர், ஒவ்வொரு நாளும், வைகறைப் பொழுதில் திருமடைப்பள்ளிக்குச் சென்று பார்வையிடுவார். சுவாமியின் நிவேதனத்திற்குரிய அரிசி, கோதுமை, தானியங்கள், காய்கறிகள், தேங்காய் பழம் பால் தயிர் முதலிய உணவுப் பொருள்கள் அனைத்தும், குறித்த அளவின்படி கொடுக்கப்படுமாறு கவனித்து ஆவன செய்வார். ஒவ்வொரு நாளும் கோயில் நிலங்களிலிருந்து விளையும் நெல் வகைகள், புளி முதலிய பழவகைகள், மற்றும் விளை பொருள்கள் ஆகியவை, கோயிலின் சரக்கறைக்குக் கொண்டு வரப்படும். எள் முதலிய எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் அறைக்குக் கொண்டு வரப்பெற்று, உடைத்தோ அறைத்தோ பயன்படுத்தப்பெறும். சரக்கறைத் தலைவரே, சுவாமி திருவீதி வலம் செல்லுவதற்குத் தேவையான வாகனங்களைத் தயாரித்தல், குடைகள் கொடிகள் என்பனவற்றைத் தூக்கிச் செலுவதற்குரிய ஆயிரம் கூலியாட்களை நியமித்தல், முதலிய வேலைகளையும் கவனித்துக் கொள்ளுவார்.

திருவிழாவின்போது இராக்காலங்களில் நிகழ்த்தப்பெறும் வாண வேடிக்கைகளை, அவரே ஏற்பாடு செய்வார். கூலியாட்கள் தமக்குரிய கூலியைத் தானியங்களாகப் பெறுவர். கோயிலுக்கு உரிய யானைகள் குதிரைகள் பசுக்கள் புறுக்கள் புறுக்கூடுகள் மான்கள் காட்டுப் பசுக்கள் மயில்கள் கிளிகள் ஆகியவற்றையும் சரக்கறைத் தலைவரே கண்காணிப்பார். தலைமைஇடையரின் முன்னிலையில், பசுக்களைப் பால் கறத்தல், கறந்தபாலை அதற்குப் பொறுப்புடைய கோயில் ஊழியர்களிடம் ஒப்படைத்தல், என்பவற்றை மேற்பார்வையிடுதல் இவரது கடமையாகும். ஒவ்வொரு தொழுவமும் ஓர் இடையனால் கவனிக்கப்பெற்று வந்தது. தொழுவத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதும், ஒரு நாளைக்கு இரு வேளைகள் பால் கறப்பதைக் கவனித்துக் கொள்ளுவதும், இவ்விடையனின் பணியாகும்.

கோயிற் கண்காணிப்பாளர் ஒருவர், திருமதில்களின் மீதும் கோபுரங்களின் மீதும் வளர்கின்ற புல்லுருவிகளாகிய செடி கொடிகளை நாள்தோறும் அகற்றுவதற்கு ஆட்களை ஏவுவார். அவர் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதையும், புதியனவாகக் கட்டுதலையும் நெறிப்படுத்துவார். திரைச்சீலைகளும், தொங்கல்களும் அழகுற அமைக்கப்படும் வகைகளைத் திட்டம் செய்வார். நித்திய நைமித்திகத் திருவிழாக்களில் பந்தர்கள் அமைத்தலையும், அவற்றை அழகுபடுத்துதலையும், கவனித்துக் கொள்ளுவார். அவருக்குத் துணையாக இரண்டு ஏகாங்கிகள் அளிக்கப்பெற்றிருந்தனர். பலவேறு சரக்கறைகளுக்கும் பொறுப்பாளராக இருப்பவர், கருவறையின் கிழக்கிலும் மேற்கிலும் அமைந்துள்ள, பூந்தோட்டங்களைக் கவனித்துக் கொள்ளும் கடமையுடையவராவர்; கருவறையையும் சுவாமியையும் அந்தந்தப் பருவகாலத்திற்கு ஏற்பச் சாத்துபடி செய்வதற்குரிய, நறுமண மலர்ச் செடிகளை வளர்ப்பதும், பாதுகாப்பதும், அவரது கடமையேயாகும். காய்கறிகள் பறித்தலையும், கரும்பு மற்றும் சாறுள்ள செடிகள் ஆகியவற்றை வெட்டுதலையும், அவற்றைத் திருமடைப்பள்ளிக்குச் சேர்ப்பித்தலையும், இவரே செய்வார். சரக்கறைகளில் ஒழுங்கு முறையைப் பாதுக்காத்தலும், அதற்குத் தேவையானபடி தண்டனைகளோ, பரிசுகளோ வழங்குதலும், இவரது கடமையாகும்.

கோயில் நிலங்களின் கண்காணிப்பாளர், அந்தந்தப் பருவகாலத்திற்குரியபடி, விதை விதைத்துப் பயிர் செய்தலையும், நிலத்தினின்று விளைவனவற்றையும், மற்றும் பலவகைகளில் திரட்டித் தொகுக்கப் பெற்றனவற்றையும்,

அவ்வவற்றிற் குரிய, சரக்கறைகளில் சேர்ப்பித்தலையும் கவனித்துக் கொள்வார்· கோயிலுக்குரிய கிராமங்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கோயிலுக்குத் தேவைப்படும் ஊழியர்களை அமர்த்துதல், இவரது பணிகளில் ஒன்று. இவருக்கு உதவியாளராக வேதத்தில் தேர்ச்சி பெற்ற ஏகாங்கி ஒருவர் அமர்த்தப் பெற்றிருந்தார். முஸ்லிம்களின் உட்புகவுக்கு முன்னர், சமய நிறுவனங்களின் வரிசைப் புறத்தில், கோயிலுக்கு உள்ளே ஒரு மருத்துவமனை நிறுவப் பெற்றிருந்தது. அதன் நடைமுறைக்கும் நிர்வாகத்துக்கும் பயன்படும் முறையில், ஒரு கிராமம் தானமாக வழங்கப் பெற்றது. அவ்வறக் கட்டளையின் மூலம், அம்மருத்துவமனை சிறப்புற நடை பெற்ற செய்தி, கல்லெழுத்துக்களில் பதிவு செய்யப் பெற்றுள்ளது. இடையில் முஸ்லிம் படையெடுப்பால், இம்மருத்துவமனை நலிவுற்றது ஆயினும், கி. பி. 1493-ஆம் ஆண்டில், மீளவும் தொடங்கி நடத்தப் பெறுவதாயிற்று.

இராமானுஜரால் முதலில் நிகழ்த்தப்பெற்ற, அல்லது நிகழ்த்தப்பட்டதாகச் சொல்லப் படுகின்ற, கோயிலின் சீரமைப்பும் நிர்வாகமும், சமயத் தலைவர்களின் பொறுப்பில், 14-ஆம் நூற்றாண்டின் முதற்காற்பகுதியில் நிகழ்ந்த முஸ்லிம் படையெடுப்பு வரையில், தொடர்ந்து நடைபெற்று வந்தது. சோழ அரசர்களும், பாண்டிய மன்னர்களும், அதனைச் சிறிதும் மாற்றாமல், அதன் பாதுகாப்பாளராக மட்டும் இருந்து வந்தனர். ஆனால் கி. பி. 1311, 1323 ஆகிய ஆண்டுகளில், அயலவர்கள் படையெடுத்துக்கொள்ளையிட்டுச் செய்த அழிவிற்குப் பிறகும், அதனைத் தொடர்ந்து இருந்துவந்த குழப்பகாலத்திற்குப் பிறகும், விஜயநகர வம்சத்து அரசர்கள், தங்களுடைய சொந்த ஆட்சியாளர்களை, இக்கோயிலில் திணித்தனர். அந்தக்காலம் முதல் ஆங்கிலேய ஆட்சி ஏற்படும் வரையில், இக்கோயிலின் நிர்வாகம் முஸ்லிம் ஆளுநர்களின் ஆணைக்கு அடங்கி உட்பட்டே, நடைபெற்று வந்தது. கோயிலின் சடங்கு நெறிமுறைகள், இதனால் வெவ்வேறு வகையான மாறுதல்களை அடைந்தன என்பதனைக் கோயிலொழுகு விவரித்துள்ளது. உதாரணமாக, முஸ்லிம்களின் காலத்திலிருந்து கடவுள் திருவுருவங்களுக்கு அபிடேகம் செய்யப்படும் போது, முஸ்லிம்கள் அணிகின்ற கைலி என்னும் ஒரு வகைத் துணி சாத்தப்பெற்றது; சுவாமிக்குக் காலை உணவாகச் சப்பாத்தி, வெண்ணெய், தயிர் ஆகியவை, ஈரத்துணியில் வைத்து நிவேதிக்கப்பெற்றன. தாம்பூலத்தில், இந்துக்களின் வழக்கப்படி பின்புறத்தில் தடவப்பெறுவதற்குப் பதிலாக, உட்புறத்தில் சுண்ணம் தடவப் பெற்றது. ஆங்கிலக்கிழக்கிந்தியக் கம்பெனி தனக்கு முற்பட்டிருந்தவர்களைப் போலவே, இந்தக் கோயிலின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது; கர்நாடகப் பகுதிக்குத் தன்னுடைய பிரதிநிதியாக ஜான்வேலஸ் என்பவரைக் கி பி. 1801-ல் நியமித்தது. தென்னகத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மிக்க ஆற்றலும் அதிகாரமும் வாய்ந்த, இந்தக் கம்பெனியானது சமய நிறுவனங்களை மேற்பார்த்திருந்தது. கி.பி. 1840ல் இந்தக் கம்பெனியின் இயக்குநர் குழு, கோயில்களின் மீது அரசாணையை விட்டு விடுதல் வேண்டுமென ஆணைபிறப்பித்தது.

அதன் பிறகு இந்து மதத்தைச் சேர்ந்த ஆட்சியாளர்களிடம், கோயில்கள் ஒப்படைக்கப்பெற்றன. கி. பி. 1842-ஆம் ஆண்டில் திருவரங்கத்தில் உள்ள ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயில், இராமானுஜரால் திருத்தியமைக்கப் பெற்ற முறையின்படி, பழைய காலம் முதல் கோயிலை நிர்வகித்து வந்த ஸ்தானத்தார் என்னும் அந்தணர் குழுவினரால் நிர்வகிக்கப் பெற்றது. அவர்களின் எண்ணிக்கை, சென்னையிலிருந்த பிரிட்டிஷ் அரசினரால் நியமிக்கப் பெற்ற, தனி உரிமையுள்ள ஆட்சியாளர்கள் இருவரால் மிகுதிப்படுத்தப் பெற்றது.

1858-ஆம் ஆண்டில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப் பெற்றபோது, இந்திய அரசு இங்கிலாந்து மன்னரின் ஆணையின் கீழ்ச் சென்றது கோயில்களுக்குப் பொறுப்புள்ள அதிகாரக் குழுவின் மாற்றம் தவிர, வேறு மாறுதல் எதுவும் நிகழவில்லை. 1863-ஆம் ஆண்டின், சமய அறக்கட்டளைகளின் சட்டத்தின் 20-ஆம் பிரிவு, இக்கோயிலுக்குத்

தனி நிர்வாகக்குழு ஒன்றை நிறுவியது. அதற்கு அடுத்த ஆண்டில, திருவரங்கம் கோயிலின் ஆட்சியாளாகளுக்கு இடையே கருத்தொற்றுமையின்மை ஏற்பட்டது; சென்னை உயர்நீதி மன்றத்தில் பலமுறை அது சம்பந்தமான வழக்குத் தொடரப்பட்டது. 1912-ஆம் ஆண்டில்தான், கோயில் நிர்வாகத்தினரால ஓர் ஒப்பந்தம் உருவாக்கப் பெற்று, ஒப்புக் கொள்ளப் பெற்றது.

1927-ஆம் ஆண்டு, கோயிலின் ஆட்சிப் பொறுப்பு, சென்னை இந்து சமய அறநிலையக் குழுவின்பால் ஒப்படைக்கப்பெற்றது. 1942-ஆம் ஆண்டில் உறுதி செய்யப் பெற்ற இந்த ஏற்பாடு, இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது. கோயிலின் உண்மையான நிர்வாகம், ஒரு பிராம்மணரைத் தலைவராகக் கொண்ட ஐந்து அறங்காவலர்கள் பால இருக்கின்றது. அவர்கள் அனைவரும், அறங்காவலர் குழுவினரால், புதிதாக ஆளெடுப்புச் செய்து நியமிக்கப்பெறுகின்றனர், அவர்களில் ஒருவர் மட்டும், 1801-ஆம் ஆண்டில் ஜான்வேலஸ் என்பவரால் கோயிலின் நிர்வாகம் திருத்தப செய்யப் பெற்ற காலம் முதல், பரம்பரையாகக் கோயிலிற் பணிபுரிந்து வந்த, ஐந்து பிராமணக் குடும்ப உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்று, ஓராண்டிற்கு மட்டும் பதவியில் நியமிக்கப பெறுவர்; அவர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நியமனம் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆகார். ஏனைய மூன்று உறுப்பினர்கள், வைணவ சமயத்தையும், நான்காமவர் சைவப் பிரிவையும் சேர்ந்தவராக இருப்பர். அவர்கள் தமது அறுபத்தைந்தாம் வயதில் ஓய்வு பெறுவர். கோயிலின் வருவாய் இப்போதும் ஓரளவு கணிசமாக இருந்த போதிலும், முற்காலங்களிலிருந்த அளவிற்கு ஒப்பாகச் சொல்ல முடியாது.

பல கல்வெட்டுக்கள் சான்று கூறுகின்றபடி, இந்து மதத்தைச் சேர்ந்த பல அரசர்கள், பல நூற்றாண்டுகளாக வழங்கியிருந்த கிராமங்களையும் நிலங்களையும் தான் எடுத்துக் கொண்டு, அவற்றின் மூலம் கோயிலுக்குக் கிடைத்து வந்த வருவாய்க்குப் பதிலாகச், சென்னை மாநிலத்தின் முன்னைய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி ஆண்டுதோறும் அளித்து வந்த சிறிய உதவித்தொகை, கோயில் வருவாயின் ஒரு பகுதியாக இருந்தது. அந்த ஆட்சி, மராட்டிய ஆளுநர்களாலும், அதனை அடுத்து வந்த முஸ்லிம்களாலும் கீழறுக்கப்பெற்றது. முஸ்லிம்கள் கோயிலுக்குரிய பலகிராமங்களைப் பறிமுதல் செய்தனர்; பல நிலபுலன்களைக் கைப்பற்றிக் கொண்டனர். எஞ்சிய சிலவற்றை ஓரளவு நியாயமும் கணிசமுமான இழப்பீட்டுத் தொகை அளித்துக்கோயில்களுக்கு விடுத்தனர். கோயிலுக்குரிய பல நிலபுலச் சொத்துக்கள், கிழக்கிந்தியக் கம்பெனியின் கைகளுக்கு மாறின; பின்னர் அவர்களிடமிருந்து பிரிட்டிஷ் அரசிற்குப் போயின. பிரிட்டிஷ் அரசு ஆண்டுதோறும் ஓர் உதவித் தொகையைக் கோயிலுக்கு அளித்து வந்தது. ஆனால்அவ்வுதவித்தொகை, 1842-ஆம் ஆண்டில் பெரிதும் குறைக்கப்பெற்றது. இந்நாளைய இந்திய அரசு முன்னையதை நோக்க, இன்னும் குறைந்த ஒரு சிறிய உதவித் தொகையை அளிக்கின்றது.

முன்பு கோயிலுக்குச் சொந்தமாயிருந்த கிராமங்களின் உரிமைத் தொடர்பு, இப்போது ஆண்டுதொறும் நிகழும் ஒரு சடங்கின் அளவிலேயே எஞ்சி நிற்கின்றது. தமிழ் ஆண்டுப் பிறப்பின் முதல்நாளன்று, பரம்பரை முறையில் தெரிந்தெடுக்கப்படுகின்ற ஒரு பொருளாளர், அவ்விழாவுக்கெனத் தனியலங்காரம் செய்து வைக்கப்பெற்றுள்ள சுவாமியின் திருமுன்னிலையில் சென்று, சுவாமிக்குரிய நிலங்களையும் கிராமங்களையும் ஒரு கற்பனைக் குத்தகைக்காரருக்குக் குத்தகை விடுவது போன்ற, ஒரு கற்பனைச் சடங்கில் கலந்துகொள்ளுகின்றார். திருவரங்கநாதர்தான் மேற்குறித்த நிலங்களுக்கும் கிராமங்களுக்கும், இன்றும், இனி என்றும், உண்மையான உரிமையாளராகத் திகழவல்லவராவர் என்பதனை, உறுதிப்படுத்தும் வகையில், இக்கற்பனைச் சடங்கு நிகழ்ந்து வருகின்றது.

கோயிலின் எஞ்சிய வருவாய், கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் கட்டிடங்கள், விலை பொருள்கள், ஆடுமாடுகள் ஆகியவற்றிலிருந்து

கிடைக்கின்றது. மேலும் இவற்றின் பெரும் பகுதி, திருவரங்கம் கோயிலின் ஆட்சியிலும், நிர்வாகத்திலுமுள்ள, மற்ற பிற கோயில்களி லிருந்தும் கிடைக்கின்றது. இம்மாதிரி ஏழு கோயில்கள் உள்ளன. இவற்றில் முதலாவது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மிகவும் புகழ் பெற்றதும், மக்களால் பெ தும் விரும்பிப் போற்றப்படுவதும் ஆகிய **சமயபுரம் மாரியம்மன்** கோயிலாகும். இக்கோயிலுக்குப் பக்தர்களும், யாத்திரிகர்களும் செலுத்துகின்ற காணிக்கை யின் மூலம், ஆண்டுதோறும் கணிசமான பெருந் தொகை கிடைக்கின்றது. முஸ்லிம் மக்களும், இக்கோயிலுக்கு வந்து காணிக்கை செலுத்து கின்றனர். பொன் வெள்ளி நாணயங்கள், ஆடுமாடுகள், கோழி முதலிய வளர்ப்புப் பறவைகள் முதலியனவும், இக்கோயிலுக்குக் காணிக்கையாகச் செலுத்தப் பெறுகின்றன. **திருவெள்ளறை** என்னுமிடத்தில், இரண்டா வதும் மூன்றுவதும் ஆகிய கோயில்கள் உள்ளன. அவற்றில் முறையே **புண்டரிகாட்சப் பெருமாள், வடஜமுனாதர்** எழுந்தருள்விக்கப்பெற்றுள்ளனர். இவற்றில் முன்னையதாகிய புண்டரிகாட்சப் பெருமாள் கோயில், சோழர் காலத்துக் கல் வெட்டுக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. 1947-ஆம் ஆண்டில், அது முழுவதும் திருப்பணி செய்யப்பெற்றது. அதன திருமதிற சுவர்கள், எதிரொலி எழுப்பும் தகையனவாகத் திகழ் கின்றன. இது மட்டுமின்றி, இககிராமத்தில் சுவஸ்திக வடிவத்தில், ஒரு புனித தடாகம் உள்ளது. அதன்கண் உள்ள நானகு இயற்கைக் குளங்களின் சிறப்பான அமைப்பின் பரப்பினுல், ஒரே சமயத்தில பலமககள் ஒருவரையொருவர் பார்க்க இயலாத நிலையில், ஆனுல் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளும் வகையில், நீராடுதல் கூடும்.

அன்பில் என்னுமிடத்தில், ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள்கோயில், ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் கோயில், சமயபுரத்து மாரியம்மனின் சகோதரி யாகிய ஸ்ரீமாரியம்மன்கோயில், ஆகிய ஏனைய மூன்று கோயில்கள் உள்ளன.

ஏழாவது கோயில் உறையூரில் உள் ளது. ஸ்ரீ ரங்கநாதரின் மனைவியாகிய **ஸ்ரீ நாச்சியார்** இங்குக் கோயில் கொண்டுள்ளார். திருவரங்கத்தின் வழிபாட்டு மரபு நெறியில், இக்கோயில் மிக்க சிறப்பிடம் பெறுகிறது. ஏனெனில், பங்குனி உத்திரத் திருநாளில், இங்குப் பெருமாள் தமது திருமண விருந்து விழாவின்பொருட்டு எழுந்தருள்கின்ருர். இவ் விருந்து விழாவின் பொருட்டு, ஸ்ரீரங்க நாதர் கர்ப்பக் கிரகத்தினின்று புறப்பட்டுத் திருவுலாவாக எழுந்தருளி, உறையூர் நாச்சியார் கோயிலில், காலையிற் பத்து மணிக்கு வந்து சேருகின்ருர். மாலையிற் கோயில் மண்டபத்தின் கீழ்த் **திவ்விய தம்பதிகள்** இருவரும், ஒருங்கே எழுந்தருளிச் சேவை சாதித்தலைத் தரிசிப்பதற்கு யாத்திரிகர்கள் அனுமதிக்கப்படுகிறனர். இரவு பத்து மணிக்கு ஒளி விளக்குகளுடனும், தீவர்த்தி களுடனும், பெருமாள் திருவரங்கத்துக்குத் திரும்ப எழுந்தருள்கின்ருர். ஸ்ரீநாச்சியாரின திருவுருவம் கோயிலைவிட்டுப் புறப்படுவது, ஒவ்வோர் ஆண்டிலும் இந்த ஒரு முறையே யாகும். அதனுல்தான் பங்குனி உத்திரத் திருநாளில், இக்கோயிலுக்குப் பக்தர்கள் பெருங்கூட்டமாகத் திரண்டு வருகின்றனர்.

இங்ஙனம் பலவகைகளில் வரும் வருவாய்த் தொகைகளுடன், பார்வையாளர்களும, பயணிகளும், யாத்திரிகர்களும், கோயிலின் முதனமையான சிறபபிடங்களுக்குச் செல்ல வும்; பொருட்காட்சிக் கூடம், அணிகலன்களின் தொகுப்பு ஆகியவற்றைக காணவும்; செலுததுகினற கட்டணமும சேர்த்துக் கொளளபபடு தல் வேண்டும். கோயிற் கட்டடஙகளின் அலங்காரம் நிர்வாகம் சீர்திருத்தம் முதலிய வைகள், பொதுமக்களின் நன்கொடை நிதியு தவிகளினுல் நடைபெறுதற்குரியனவாக உள்ளன.

இந்நாளைய மரபுகளும் சடங்குகளும்:

பண்டைக்காலத்தில் வகுக்கப் பெற்ற சடங்குமுறைகள், திருவரங்கத்தில் இப் போதும் பாதுகாத்து வரப்பெறுகின்றன. பூசை முறைகள், மற்றுமுள்ள பல சடங்கு முறைகள் ஆகிய இரண்டும், கோயிலொழுகு நூலில் குறிக்கப் பெற்றுள்ள விதிமுறை களைப் பெரும்பாலும் பின்பற்றித் தழுவியே

நடத்தப் பெறுகின்றன. ஒவ்வொரு நாளும் கோயிலானது, காலை 6 . 45 மணிக்குத் திறக்கப் பெறுகின்றது. பூசை புரிபவர்களும், மற்றும் பல பணியாளர்களும், தத்தம் கடமைகளைத் தொடங்குகின்றனர். கோயிலின் கருவறைக்கு அருகே ஒரு பசுவும், கோயில் யானைகளில் ஒன்றும், சுவாமியின் திருமுன்னிலையை நோக்கியும், தம்முள் ஒன்றற்கொன்று எதிர் முகமாகவும், நிறுத்தப்படுகின்றன. அதே சமயத்தில், இரண்டு புரோகிதர்களால் கொள்ளிடம் நதியிலிருந்து முகந்து கொண்டு வரப்படும் புனித தீர்த்தம், கோயிலின் உள்ளறையில் வைக்கப்பெற்றுள்ள ஐந்து பாத்திரங்களில் நிரப்பப்பெறுகின்றன. முன் இரவில் இடப்பெற்ற கோயிற் கர்ப்பக்கிரகத்தின் பூட்டு, பின்னர்த் திறக்கப் பெறுகின்றது. அதன் சுற்றுப்புறங்கள் மிக்க கவனத்துடன் நன்றாகத் தூய்மை செய்யப்படுகின்றன. இத்தகைய பூசைத்தொடக்கப் பணிகள் புரியப்படும்போது, இசையில் வல்ல ஒருவர் வீணை அல்லது சிதார் வாசித்து, திருப்பள்ளியெழுச்சி பாடி இறைவனைத் துயிலினின்று எழுப்புவார். அப்போது, ஒரு குறிப்பிட்ட அடையாள அறிவிப்பின் போது, திரைச்சீலை அகற்றப்படுகிறது. சுவாமி மிகவும் சிறந்த மங்கலப் பொருள்களாகிய யானையையும், பசுவையும் முதலில் காண்பதன் மூலம், தமது நாளைத் தொடங்குகின்றார். கோயிலை வலம்புரிந்து நடந்து கொண்டு கர்ப்பக்கிரகத்தின் முன் வந்து சேருகின்ற பக்தர்கள், அப்போது சுவாமியைத் தரிசிக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனர், சுவாமி அவர்களையே, முதன் முதலாகக் காண்கின்றார். திரைச்சீலை மறுபடியும் கீழே விடப் பெறுகின்றது. பசுவும் யானையும் திரும்ப அழைத்துச் செல்லப்படுகின்றன. பின்னர்க் கோயிற் சோதிடர், சுவாமியின் திருமுன்னர் நின்று, அன்றைக்கும் மறுநாளைக்கும் உரிய திதி, நட்சத்திரம் வாரம் யோகம் கரணம் போன்ற பஞ்சாங்கச் செய்தி விவரங்களை உரத்த குரலில் வாசிப்பார்.

தினமும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பூசைகள் இங்குச் செய்யப்படுகின்றன. காலையில் செய்யப்படும் பூசையே, எல்லாவற்றிலும் முக்கியமானதாகும். அப்போது நிகழ்த்தப்படுகின்ற சடங்கின் நெறிமுறைகள், பண்டைக் காலம் தொட்டுச் சிறிதும் மாறுதனவாகவும், விஷ்ணு கோயில்கள் எல்லாவற்றிலும் நிகழ்த்தப்படும் பூசை முறைகளையே பெரிதும் ஒத்தனவாகவும் இருக்கும். பாகவத நம்பிகள் அல்லது பட்டர் என்போர், சுவாமிக்குத் தந்தசுத்தி, கரசுத்தி, பாதசுத்தி ஆகியவற்றைச் செய்வது முதல், பூசை தொடங்கப்பெறுகின்றது. ஒரு பணியாளர் சுவாமிக்கு முன்னர்க் கண்ணாடி ஏந்தி நின்று காட்டுவார். நண்பகற் பூசையொழிந்த மற்றைய நேரங்களில், சுவாமி வெந்நீரால் அபிடேகம் செய்யப் பெறுவார். பின்னர்ச் சுவாமிக்கு வெண்ணெய் பூசவும், குங்குமப்பொடி சாத்தவும் பெறும். அவரது மார்பிலும் பாதங்களிலும், சந்தனக் குழம்பு அணிவிக்கப்பெறும். வெள்ளிக்கிழமைகளில், ஒரு சில குறிப்பிட்ட பருவங்களில், பச்சைக் கற்பூரம் கலக்கப்பெற்ற எண்ணெய் சுவாமிக்குப் பயன்படுத்தப்படுகிறது. அபிடேகம் பொதுமக்கள் முன்னிலையிலோ, அல்லது கர்ப்பக்கிரகத்தில் தனியாகவோ, அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி நிகழும். பின்னர்ச் சுவாமிக்கு தூய உலர்ந்த ஆடைகள் சாத்தவும், அவரது நெற்றியில் நாமம் அணிவிக்கவும் பெறும். பின்னர்ப் புதிய பூமாலைகளும், நல்ல அணிகலன்களும் சாத்துபடி செய்வர். அப்போது இசைவாணர்கள் வீணை வாசிப்பர்.

இவ்வாறு அலங்காரங்கள் செய்தானதும், கர்ப்பக்கிரகத்தின் முன் உள்ள திரைச் சீலை, மிகவும் உயர எழுப்பப்படும். அப்போது கர்ப்பக்கிரகத்தின் நுழைவாயிலுக்கு முன்னே உள்ள மண்டபத்தில், ஒருங்கு திரண்டுள்ள பக்தர்கள் சுமார் ஒரு மணி நேர அளவுக்குச் சுவாமியைத் தருமதரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

அடுத்து, சுவாமிக்குப் பிரசாத நிவேதனம் நடைபெறும். அவைகள் கோயில் திருமடைப் பள்ளியிலிருந்து, பிராமணப் பரிசாரகர்களால், கூடைகள் அல்லது தக்க பாத்திரங்களில் வைக்கப்பெற்று வரும். இதற்கு இடையில் தீபங்கள் ஏற்றப்படும். இதன்பின்னர், சுவாமிக்கு

வெற்றிலை பாக்குத் தாம்பூலம் அளிப்பர். அதன்பின், சுவாமி தமது வாய் கொப்பளிக்கும் முறையில், ஓர் அடையாளச் சடங்கு நிகழும். பின்னர்ப் பக்தர்களின் சார்பில் ஊதுவத்தி, வெண்ணெய்,சிறு விளக்குகள், துளசி தளங்கள். பூக்கள், பூமாலைகள் முதலியன, தோத்திரப் பாடல்களுடன் முறையே சமர்ப்பிக்கப்படும். இவைகள் பூசை நிறைவுற்று முடிந்ததனைக் குறிக்கும். அப்போது பக்தர்கள் பொதுவாக அங்கு இருப்பதற்கு உரிமையுடையவர் அல்லர். ஆனால் அவர்கள் தமது அன்பியற் பூசைப் பொருள்களை வழங்குவதன் மூலம், அதிற் கலந்து கொள்ளுவர், அதன்பிறகு அவர்கள் தாராளமாகச் சுவாமி தரிசனம் செய்து வணங்கி மகிழலாம்.

இத்தகைய நித்திய பூசைகளுடன், அவ்வக் காலத்திற்கும் பருவத்திற்கும் உரிய நைமித்திக பூசைகள் பல உண்டு. அவைகள் தொன்று தொட்டே நடைபெற்று வருவதனைக் கல் வெட்டுச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. ஓர் ஆண்டில், வார-மாத-வருட-பூசைச் சடங்குகள் அல்லது விழாக்கள், மொத்தம் 322 நடைபெறு கின்றன. அவைகள் அனைத்தும் வைஷ்ணவப் பஞ்சாங்கத்தின்படி, எல்லாத் திருநாட்களையும் தழுவி, நடைபெறுகின்றன. இவ்விழாக்கள் எல்லாவற்றினும் மிக்க முதன்மையும் சிறப்பும் வாய்ந்தது, வைகுண்ட ஏகாதசி விழாவாகும். அது தென்னிந்தியத் திருவிழாக்களுள், மிகவும் புகழ்மிக்க தொன்றாகும். அவ்விழா மார்கழி-தை (டிசம்பர்-ஜனவரி) ஆகிய இரண்டு மாதங் களுக்கு இடையில், 21 நாட்கள் நடைபெறும், அதற்குரிய ஏற்பாடுகள் அக்டோபர் மாதத்தின் இறுதியில், ஒரு தென்னை மரத்தின் அடித்தண் டினை, அவ்விழாவிற்குரிய பந்தரின் முதற் கம்ப மாக நடுவதிலிருந்து தொடங்கும். அப்பந்தர் அமைத்து முடியும்போது, நாற்பத்தேழு கம்பங்கள் இருக்கும். அப்பந்தர் மூன்றாவது பிராகாரத்தில் வடகிழக்கு வாயிலில், ஆயிரம் கண்ணுடிகளின் மண்டபத்தின் முன்னே அமைக் கப்படும். இரண்டாம் பிராகாரத்தில் வடக்கு வாயில் வழியாக, சுவாமி அங்கே உலாப்புற மாக எழுந்தருளுவிக்கப் பெறுவர். இந்த இரண்டாம் பிராகாரத்தின் வடக்கு வாயில், ஆண்டு முழுவதிலும் மூடப்பெற்று, இந்த ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே, திறக்கப்படும். ஆழ்வார்களின் திருப்படிமங்களும், ஆசாரியர் களின் திருப்படிமங்களும், ஒன்றன்பின் ஒன்றாகச் சுவாமிக்கு அருகே, அவர் எழுந்தருளி யுள்ள மண்டபத்தின் நடுவிடத்தில் கொண்டு வந்து வைக்கப்பெறும். **பகற்பத்து இராப்பத்து** என்னும், இத்திருவிழா நாட்கள் முழுவதிலும், சுவாமியின் திருமுன்னிலையில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் முழுவதும், ஓதவும் பாடவும் பெறும். ஆண்டிற்கு இரு முறை ஜனவரி மாதத்திலும், ஏப்ரல் மாதத் திலும் பெருந்திரளான மக்கள் கூட்டத்திற்கு இடையில், சுவாமி திருத்தேரில் எழுந்தருளித் திருவீதிவலம் வருவார்.

மார்ச்சு மாதத்தில், கோயிலுக்கு வெளியே ஏழாவது பிராகாரத்தின் மேற்கேயுள்ள திருக் குளத்தில், இரவில் **தெப்பத் திருவிழா** நடை பெறும். சுவாமியும் அவர்தம் இருதேவியரும், ஒளி விளக்குகள் அமைக்கப்பெற்ற தெப்பத்தில் அமர்த்தப்பெறுவர். அத்தெப்பத்தைக் கயிறு கொண்டு கட்டித் திருக்குளத்தின் நடுவேயுள்ள நீராழி மண்டபத்திற்கு இழுத்துக்கொண்டு சென்று சேர்ப்பர். அங்கே சுவாமிக்குப் பூசை கள் நிகழும். ஆண்டுக்கு ஒருமுறை மார்ச்சு ஏப்ரல் மாதங்களுக்கு இடையில், சுவாமி தமது தேவியைச் சந்திப்பதற்காக உறையூரிலுள்ள **ஸ்ரீநாச்சியார்** கோயிலுக்கு எழுந்தருள்வர் என்பது, முன்னேயே குறிப்பிடப்பட்டது. இவ் விழா ஒன்பது நாட்கள் நடைபெறும். அதில் பற்பல திருவீதி உலாக்கள் நடைபெறும். இ

விலும் பகலிலும் பற்பல பூசைகள் நிகழும். அவற்றில் மிகப்பெரிய அபிஷேகமும், திருவூடல் நிகழ்ச்சியும் இடம்பெறும். அத்திருவூடல் நிகழ்ச்சியில் சுவாமியின் சார்பிலும், ஸ்ரீநாச்சியார் சார்பிலும், இருதொகுதிப் புரோகிதர்கள் வாதப் பிரதிவாதங்கள் செய்யும் முறையில், பல பாடல்களைப் பாடி அபிநயம் பிடிப்பர்.

இவ்வாறு இக்கோயிலில் மற்றும் எத்தனையோ பல, திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அவைகள் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லி விவரிப்பது இங்கு இயலாததாகும். அவைகள் அனைத்தும், திருவரங்கத்தில் நிலைபெற்று நடைபெற்று வருகின்ற விஷ்ணு வழிபாட்டு நெறிமுறையின், தனிப்பெரும் சிறப்பான தெய்விகப் புனித ஆற்றலுக்குச் சான்று பகர்கின்றன. இவ்வாற்றல் திருவரங்கமானது, இந்தியா முழுவதுமே பெருமிதமுற்று மகிழ்தற்குரிய சிறப்புமிக்க மரபுநெறிக்கும், சிறந்த பல செயல் நிகழ்ச்சிகளுக்கும், உரிய ஓர் அரும் பெரும் நிலையமாக, இன்றளவும் மாட்சிமை மிக்கு விளங்கிவருகின்றது.

(முற்றிற்று)

—ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

அல்லூர்ச் சிவாகம பாடசாலை: ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசியுடனும், சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை இலாகாவின் ஒத்துழைப்புடனும், சென்ற ஏழு ஆண்டு காலமாக, அல்லூரில் வேத சிவாகம பாடசாலை நடைபெற்று வருகின்றது. இதன் ஏழாம் ஆண்டு நிறைவு விழா, சென்னை அறநிலைய ஆணையாளர் திரு. கே. எஸ். நரசிம் மன், B. A., B. L., I A. S, அவர்கள் தலைமையில், சென்ற 28—5—71ல் நடைபெற்றது. சென்ற ஆறு ஆண்டுகளாகப் பயிற்சி பெற்றுவரும் மாணாக்கர்களில் ஐந்து பேர்கள் பயிற்சியை முடித்துத் தேர்ச்சி பெற்றனர். அவர்களுக்கு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அளித்தருளிய அகிம்சா பட்டையும், வியாச பாரத கலாதி சதஸ் சமாஜத்தினர் சார்பில் அளிக்கும் சம்பாவனையையும், திரு ஆணையாளா அவர்கள் வழங்கினார்கள். இவ்விழாவில் கூனவேலம்பட்டி திரு. சரவண மாணிக்கவாசக சுவாமிகள் அவர்களும், கோவைத் துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், B. A., B. L., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மிகச் சிறந்த மாணவர் இருவருக்குத் "திருமுருக கிருபானந்தவாரியார் பரிசு, திரு. ஏ. வி. கணபதி அய்யர் பரிசு" ஆக இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. திரு. வி. விசுவநாத சிவாச்சாரியர் கல்லூரியைப் பற்றிய விளக்கவுரையும், திருச்சி திரு. வி. பாபுகோபால் அவர்கள் வரவேற்புரையும், அல்லூர்ப் பிரபல மிராசுதார் திரு. ஏ. வி. கணபதி ஐயர் அவர்கள் நன்றியுரையும் கூறினர். விழா சிறப்புற நிறைவேறியது.

— ஆசிரியர்.

மதிப்புரைகள்

திருவுந்தியார் : சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள் ஒன்று. திருவியலூர் உய்யவந்ததேவ நாயனர் இயற்றிய இந்நூல், 45 கண்ணிகளைக் கொண்டது. இதற்குச் சிவப் பிரகாசர் எழுதிய உரைவிளக்கம், வித்துவான் பொன். அ. கனகசபை அவர்கள் எழுதிய பொழிப் புரையுடன், நன்கினிது ஆராய்ந்து திருத்தமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

உண்மைவிளக்கம் : திருவதிகை மனவாசகங்கடந்த தேவநாயனர் இயற்றியது. இதன்கண் திருவாவடுதுறை ஆதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தக் கலைச்செல்வர் திரு. க. வச்சிரவேலு முதலி யார் பி. ஏ. எல். டி., அவர்கள் எழுதிய தெளிவுரையும், திரு ஜே. எம். நல்லசாமி பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும் அடங்கியுள்ளன. நூல் சிறிய தாயினும் அதன் பயன் மிகப் பெரியது. நல்ல சிறந்த பதிப்பு.

தாமோதரம் : தமிழ் நூல்களின் சிறந்த பதிப்பாசிரியர்களாக விளங்கியவர்களுள், ஒருவ ராகிய இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை, பி. ஏ. பி. எல் அவர்கள் (1832—1901), தாம் பதிப்பித்த வீர சோழியம், கலித்தொகை, இலக்கணவிளக்கம், சூடாமணி, தொல்காப்பியம் முதலிய நூல்களுக்கு எழுதிய முகவுரைகள், இதன்கண் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பழைய செய்திகளையும், புலவர்களையும், கருத்துக்களையும் அறிந்து கொள்ளப் பயன்படும் நல்ல நூல். இம் மூன்றும் கிடைக்குமிடம் : கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், 411/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

சிவராத்திரிப் புராணம் : இந்நூல், இலங்கை யாழ்ப்பாணத்தில் சுன்னகம் என்னும் பதியில் இற்றைக்கு ஏறத்தாழ 250 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிறந்து வாழ்ந்து வந்த பெரும்புலவர், வரதராஜகவிராசர் (கி. பி. 1656—1716) என்பவரால் இயற்றப்பெற்ற சிறந்த செய்யுள் நூல். சிவராத்திரியின் சிறப்பும், அதனை அனுட்டிக்கும் முறைகளும், அனுட்டித்துப் பயன் பெற்றோர் வரலாறுகளும் பற்றி, நன்கினிது விளக்கிப் பாடுகின்றது இந்நூல். இதற்கு உடுப்பிட்டி பண்டிதர் திரு. குமாரசூரிய பிள்ளை அவர்கள், நல்ல இனிய உரை வகுத்துள்ளார்கள் இதனை ஸ்ரீ காந்தா அச்சக உரிமையாளர் திரு. மு. கணபதிபிள்ளை அவர்கள், தமது மணிவிழாவின் நினைவாகப் பதிப் பித்து எளிய விலைக்கு வெளியிட்டுள்ளார்கள். பக்தர்களுக்குப் பயன்படும் மிக்க சிறந்த, இனிய நல்ல நூல். திருத்தமான தூய சிறந்த பதிப்பு. கிடைக்குமிடம்; ஸ்ரீ. காந்தா அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை.

சிவராத்திரிச் சிறப்பு : சைவசமய மக்கள் அனைவராலும் கடைப்பிடித்து ஒழுகப்பெறும் விரதங்கள் அல்லது விழாக்கள் பலவற்றுள், சிவராத்திரி தலை சிறந்தது ஒன்று. அவ்விரதத்தின் சிறப்பினையும் கடைப்பிடிக்கும் முறைகளையும், அது பற்றிய வரலாறுகளையும், அவ்விரதத்தின் மேன்மை பற்றிப் பெரியோர்கள் பலர் அருளியுள்ள புகழுரைகளையும், இந்நூல் நன்கினிது தொகுத்து விளக்கு கின்றது. இதனைத் தொகுத்து அழகுறப் பதிப்பித்தவர், "ஸ்ரீலங்கா" பத்திரிகையின் ஆசிரியராக வும், இலங்கை அரசின் தலைமை மொழிபெயர்ப்பாளராகவும், மேதகு ஆளுநர்தலைவர் அவர்களின் விளக்குநராகவும் விளங்கியிருந்து, ஓய்வு பெற்றுள்ள செந்தமிழ்ச் சைவப்பெரியார்: திரு. முதலி

யார் குலசபாநாதன் அவர்கள், ஆவர். இந்நூல் கிடைக்கும் இடம்: திரு. குல. சபாநாதன், முருகன் அருள். 3/2 இராமகிருஷ்ண டெரேசு, கொழும்பு—6.

வள்ளி மணாளன்: இந்நூல், வள்ளிமலை என்னும் புகழ்மிக்க தலத்தைப் பற்றியது. முருகப்பெருமான் வள்ளியை மணந்த வரலாற்றையும், அத்தலத்தின் பலதிறச் சிறப்புகளையும், இந்நூல் ஆசிரியர், எளிய இனிய நடையில் சிறப்புறவும், சுவைமிகவும் விளக்கியுள்ளார். இத்தலத்தைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள், செவி வழிச் செய்திகள், சிற்பக்கலை நலன்கள் ஆகியவற்றை இதன் ஆசிரியர் திரு. சண்முகம் அவர்கள் நன்கினிது திரட்டித் தொகுத்துத் தந்துள்ளார். வள்ளி மலைத் திருப்புகழ்ப் பாடல்களும், இதன்கண் பிற் சேர்க்கையாகத் திரட்டித்தரப்பட்டிருக்கின்றன. இடைஇடையே மேற்கோள் காட்டப்பெற்றுள்ள செய்யுட்கள், நூலின் சிறப்பையும் சுவையையும் மிகுதிப் படுத்துகின்றன. ஆசிரியரின் புலமையும், பக்தியும் ஆராய்ச்சியும், எழுதுந் திறனும் போற்றற்பாலனவாகத் திகழ்கின்றன. கிடைக்குமிடம்: வைரம் பதிப்பகம், 51, பெல்சு சாலை திருவல்லிக்கேணி சென்னை—5

செய்திச் சுருக்கம்

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டம், கோவிலூர் ஸ்ரீமந்திரபுரீசுவர சுவாமி ஆலயத்தின் சார்பில் கட்டப்பட்ட, ஸ்ரீ பெரிய நாயகி மகளிர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தைத் தஞ்சைத் துணை ஆணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி, B. Sc. B. L., அவர்கள் தலைமையில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன் அவர்கள், 7-6-71 திங்கட்கிழமை மாலை திறந்து வைத்தார்கள். திரு மன்னை ப. நாராயணசாமி M. L. C., அவர்களும், தஞ்சை முதன்மைக் கல்வி அதிகாரி திருமதி சி. விசாலாட்சி அம்மையார், B. Sc., L. T., அவர்களும், தஞ்சை மகளிர் பள்ளி ஆய்வாளர் திருமதி கே. இராஜம்மாள், B, Sc, L, T., அவர்களும், நாகை வட்டம் உதவியாணையாளர் திரு. பெ, புலியூருடையான் அவர்களும், விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பொள்ளாச்சி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன் அவர்கள் வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல்,

மயிலைத் திருவள்ளுவர் கோயில்

திரு. சு. க. கல்யாணசுந்தரம் மயிலை.

சென்னைத் திருமயிலையில், திருவள்ளுவர் கோவிலொன்று இருப்பதை, சென்னைவாழ் பாமரர்கள் இன்னும் அறியாமல் இருக்கின்றார்கள் என்பது ஒருபுறமிருக்க, தமிழறிந்த சான்றோர்களும், மூதறிஞர்களுங்கூட, அதை அறியாமல் தான் இருக்கின்றார்கள். இதை எண்ணும் போது தமிழறிந்த உள்ளம் நாணுகின்றது; குறளறிந்த உள்ளம் கூனிப் போகின்றது.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்து குறள்யாத்த வள்ளுவப் பெருந்தகை, பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடம் "மயிலை" என்பது, ஒரு வரலாற்று முடிவு. இதைச் சர்ச்சைக்குரிய தாக்கிக் கொண்டு வாளாவிருப்பது, இன்றைய தமிழ்க் குடிமக்களுக்கு உடன்பாடாக இருக்கக் கூடாதென்பதே என் துணிபு.

ஏனெனில் ஆராய்ச்சியும் ஆராய்ச்சிக்கான சர்ச்சைகளும வளர்ந்து கொண்டே போவது ஒரு சங்கடம்; அப்படியே ஆராய்ந்தொரு முடிவெடுத்தாலும், அந்த முடிவை ஒருமித்து ஏற்றுக் கொள்வதென்பது மற்றொரு சங்கடம். இந்த மாதிரியான சங்கடங்களுக்கிடையே, தமிழர்கள் தங்களுக்குள்ள சொந்தமான ஆயிரமாயிரம் அருமைபெருமைகளை இழந்துவிட்டார்கள்-புறக்கணித்தும் கிடக்கின்றார்கள். காலங்கடந்து ஆராய்ச்சிக்குள் நுழைவது கடமையைத் தட்டிக் கழிப்பதாகவும் ஆகிவிடும் எனவே. கிடைத்திருக்கின்ற புலன் ஒன்றிரண்டை வைத்துக்கொண்டு, அதையே மேலெனப் போற்றித் தமிழர் பெருமக்கள் தங்கள் அருமை பெருமைகளைப் பாராட்டிச் சிறப்பேற்றிக் கொள்ள வேண்டியதும், பாதுகாத்துக் கொள்ள வேண்டியதும் வரலாற்று நிர்ப்பந்தம்; அனுபவப் பாடம்!

இதற்கேற்ப மயிலையில் கோவில் கொண்டுள்ள வள்ளுவப் பெருந்தகையின் திருக்கோவிலைப் பேணிக் காக்கவேண்டிய ஆர்வமும், கடமைப் பொறுப்பும், நம்மிடையே மூண்டெழுதல் இன்றியமையாததாகும். தெய்வப் புலவன்பாலும், அவன் யாத்துத் தந்த பொது மறையின்பாலும், பற்றுக் கொண்டவர்கள் யாரும் இதில் இரண்டபிப்பிராயம் காண மாட்டார்கள்.

சிங்காரச் சென்னையில் கோவில்களும் கூட கோபுரங்களும், நினைவு மண்டபங்களும், ஏராளமாய் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒரு நினைவுச் சின்னமாயும், வழிபாட்டுக்குரிய புனித தலமாகவும் காட்சியளிக்கின்றது. அண்ணாமலை மன்றம், நேரு ஸ்டேடியம், காந்தி மண்டபம், ரிப்பன் கட்டிடம், அறிஞர் அண்ணா சமாதி போன்ற நினைவுச் சின்னங்களும்; கபாலீச்சரம், கந்த கோட்டம், சென்ன மல்லிகேஸ்வரர் தேவஸ்தானம் போன்ற பலப்பல புனிதத் தலங்களும்; சென்னை மாநகரின் உட்புறத் தோற்றங்களை அயல் நாட்டாருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றன! இவைகளின் வரிசையில் முன்னணியிலும், மொத்தத்திற்கும் முத்தாய்ப்பு வைத்தது போன்ற முதலிடத்திலும் இருக்கவேண்டியது, வள்ளுவப் பெருந்தகையின் கோயிலாகும்.

திருவள்ளுவர்க்கு நினைவார்த்தமாக மிகமிகப் பழமையான ஒரு கோயில் மட்டுமே உள்ளது. அதுவும் துலக்கங்கெட்டு, வரிசைப் படுதுவதற்கான எண்ணிக்கையில் இடம் பெறத் தகுதியில்லாத அளவு. மக்களிடையே அறிமுகமற்று இருக்கிறதென்றால், அது தமிழுக்கும், தமிழ் கூறும் நல்லுகிற்கும், எத்துணைய மானக்கேடு என்று நானல்ல, வந்து காணுகின்ற தமிழ்ப் பேரறிஞர்கள் பலரும் கருதுகிறார்கள்,

உலகப் பொதுமறை தந்தபெருமானுக்கு; காலத்தாலும், கலாச்சாரத்தாலும், மதமாற்சரியத்தாலும், மற்றவைகளாலும் சாய்க்க முடியாமல், அவைகளையெல்லாம் வென்று நின்று இமயச் சுடர்போல ஒளிவிடும் குறளை யாத்த கோமகனுக்கு; வாழ்க்கையில் வாழ் வாங்கு வாழத் தடமமைத்த வழிகாட்டிக்கு; புலமையில் முடிசூடிய புரவலனுக்கு; தத்துவ போதனையில் தன்னிகரற்ற தகைசான்ற வித்தகனுக்கு-அவன் பெயரால, கலைக்கூடம் இல்லை, மணிமண்டபம் இல்லை. நூலகம் இல்லை, நினைவாலயம் இல்லை. விந்தையா வேதனையா, தமிழான்றோர்களே நீங்கள் எண்ணிப்பாருங்கள்!

உலகத்தில் எந்தச் சாராரும் ஒதுக்கமுடியாத ஒரு பொதுமாமேதையின் ஞாபகமாக மேலே குறிப்பிட்டவைகள் யாவும் வேண்டாமா! இருக்கின்ற ஒரே ஒரு கோவிலையும், திருக்கோவிலாக அல்லாமல் வெறுங் கோவிலாக, மூவேந்தர் காலத்து வழிச்சத்திரம்போல் இடிந்து உடைந்து கிடக்க விட்டுவிடுவது சாலப் பொருந்துமா? சால்புடையதா! அந்தப் பெருந்தகையின் திருநாட் பெருவிழா, கடந்த வாரம் நடைபெற்றபோது அதில் பேரா வத்தோடு பங்குகொண்டு சொற்பெருக்காற்றிய முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், தமது நீண்ட உரையின் நடுவே, நாற்பது இலட்சத்தில் மணிமண்டபம் முப்பால் முதல்வனுக்கு அமைத்திடத்திட்டமிட்டோம்... ஆனால் இடமில்லாத காரணத்தால் அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டிருக்கிறோம் என்றாரே.

இதோ மயிலையில் திருக்கோயில் அமைந்துள்ள இடத்தில் அதை எழுப்ப இடம் கொடுத்துவிட வேண்டியதுதானே...அதற்கென்ன தடை? என்று நீங்கள் துடித்துப் போய்க் கேட்கிறீர்களா! கேளுங்கள்-திட்டவட்டமாக! செந்நாப் புலவன் திருக்கோவில் வான்முட்டும் கூடகோபுரமாக எழும்பட்டும்-எட்டு திக்கிற்கும் இமயம்போல் தெரியட்டும். இந்து சமய அறக்கட்டளை ஆட்சித்துறையின் செம்மையான நிர்வாகத்தின் கீழ் உள்ள அந்தத் திருக்கோவில்-அந்த ஆட்சித்துறையின் மேலான கவன ஈர்ப்புக்கு இலக்கானால். நிச்சயம் நிமிர்ந்து நிற்கும் அங்கே 'மணிமண்டபம்' நினைவாலயமாக!

கூடவும், தமிழ்நாட்டின் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் 'கழக அரசு' எங்கும் தமிழ், எதிலும் குறள்! என்ற நடைமுறையைப் பரபரப்போடு உண்டாக்கி வருவதால்-வள்ளுவமாமேதையின் நினைவாலயம் எழுப்பப்படுவதை முந்திக் கொண்டு ஆதரிக்கும்-முனைந்துநின்று அதற்கான எல்லா உதவிகளையும் தாமதமின்றிச் செய்யும்.

ஆகவே, தமிழ்ப் பெருங்குடி மக்கள் தெய்வப் புலவனுக்கு நினைவாலயம் தமிழ்நாடு முழுவதும் எழுப்பியாக வேண்டுமென்று குரல் எழுப்புவதில் முதற்கட்டமாக, சென்னை-மயிலையில் உள்ள அவர் திருக்கோவிலைச் சீர்திருத்தி, அதன் பாழ்நிலையைப் புதுப்பித்து, அங்கே மணிமண்டபம், கலைக்கூடம், நூலகம் போன்றவைகளை அமைப்பதற்கான முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தாக வேண்டுமென்று, மயிலைத் திருவள்ளுவர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவன் என்ற முறையில் பணிவன்போடு பொதுமக்களே, தமிழன்பர்களே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நடந்துமுடிந்த திருநாட் பெருவிழாவில், தமிழறிஞர்கள் அனைவரும் ஒருமித்து, மேற்கண்ட முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள். இயன்ற அளவு உதவியும் செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். அறநிலையப் பாதுகாப்புத்துறையின் துணை ஆணையாளர் திரு. வெங்கடாசலம் அவர்கள், மேற்படி திருநாட் பெருவிழாக் கூட்டத்தில் பேசும்போது, திருமயிலையில் உள்ள திருவள்ளுவர் திருக்கோவிலைச் சீர்திருத்தி, செப்பனிட்டு மண்டபமும் நூலகமும் கலைக்கூடமும் அமைப்பதற்கான வேலைத் திட்டத்திற்கு, தம் இலாகா மூலம் என்ன அதிக அளவு முடியுமோ, அவைகள் யாவையும் செய்வதாய் உறுதியளித்திருக்கிறார்கள்.

அரசும், அறநிலையத் துறையும், நமக்கு ஒத்துழைக்கும் என்ற நிலை ஐயப்பாடின்றி இருப்பதால், அதனை அமைக்கின்ற முயற்சியில் நல்ல தீவிரம் காட்டுவது தான் தமிழர் கடனாகும். அதற்கான நிதி நிலை மேற்படி கோவிலினபால் இல்லையென்பதை, அது இருக்கும் நிலையறிந்த யாரும் நினைவு கூர்வார்கள். தேரடிப்பண்டாரம்போல, திருவிழாக்காலங்களில் மட்டும் இரண்டு வேளை முழு உணவும், மற்றைய வேளைகளில் கால் வயிறும், அரை வயிறும் என்ற நிலையிலேயே, உத்சவ காலத்தில் இரண்டு வேளை விளக்குகளும், மற்றபடி ஒரு வேளை, அதுவும் மூலவருக்கு மட்டும்தான் என்ற பரிதாப நிலையிலேயே அதன் வருமானம் உள்ளது.

இந்த வரவு செலவை வைத்துக்கொண்டு எந்த அளவு திருக்கோவிலை நிர்வகிக்க முடியுமோ, அந்த அளவு நிர்வகிப்பதில் அறங்காவலர் ஒரு பாரம்பரியத்தை உண்டு பண்ணி விட்டிருக்கிறார்கள். எனவே தாய்த்திருநாட்டுத் தமிழன்பர்களே, சான்றோர்களே, உங்களையெல்லாம் கரங்கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன். புலமையில் மணிமுடி சூடிய புலவனுக்கு, பொதுத் தமிழ் மறையைத் தந்த வித்தகனுக்கு, வானளாவ ஒரு மணிமண்டபம், வெளிநாட்டோர் வந்து கண்டுகளிக்கும் ஒரு கண்காட்சிக் கூடம், தமிழ்மறை நூலகம் ஆகியவை அமைக்க நாங்கள் பணியைத் தொடங்கி விட்டோம்—நீங்கள் உங்கள் பரந்துவிரிந்த தமிழ் உள்ளத்தால்—தமிழ்த்தாயின் தலைமகனுக்கு நன்றிக்கடனாக வாரி வாரி வழங்கிட-அள்ளி அள்ளித் தந்திட முன் வாருங்கள். முந்திக்கொண்டு நில்லுங்கள்! நீங்கள் தருகின்ற ஆக்கமே—எங்கள் பணிக்கு ஊக்கமாக அமையும்! வாழ்க தமிழ்! வளர்க வள்ளுவம்!

மயிலைத் திருவள்ளுவர் கோயிலின் இராசகோபுரத் திருப்பணியைச் சென்னைத் துணையாணையர் திரு. ஏ. வெங்கடாசலம், B.Sc., B.L., அவர்கள் துவக்கி வைத்தல். (7—5—71)